Chundikuli Branch Library

விலை ரூபா 2-00 ★ 10 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 ஆனி 9 ஷவ்வால் 4 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (23-6-85) இதழ் 133

## கூட்டணி - எதிர்க்கட்சி நாளை சந்திப்பு இல்லை

(யாழ்ப்பாணம்)

கூட்டணிப் பிரமுகர்கள் நாளை திங்கட்கிழமை எதிர்க்கட்சித் தலைவர்களைச் சந்திக்கமாட்டார்கள். இச்சந்திப்பு அடுத்தவாரம் நிகழலாமெனக்கூட்டணி வட்டாரம் தெரிவித்தது.

● இனப் பிரச்னைத்தீர்வுக்கான யோசனை

# எந்த இன உரிமையையும் பாதித்தால் அரசு ஏற்காது!

## சட்டத்தைப் பாராளுமன்றம் அங்கீகரிக்க வேண்டும்

### பொது வைபவத்தில் ஜனாதிபதி

(கெஸ்பாவ)

"சிங்கள மக்கள் அல்லது எந்த ஒரு சிறுபான்மை மக்களின் உரிமைகளையும் குறைக்கக் கூடியவகையில் தற்போதைய இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்காகக் கொண்டுவரப்படும் எந்த ஒரு யோசனையையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை" என்று ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜயவர்த்தன கெஸ்பாவில் நேற்று இடம்பெற்ற பொதுவைபவமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஜனாதிபதிதொடர்ந்து அங்கு பேசுகையில், ஈழப் பிரிவினை வாதம், தீவிரவாதம் இவை

(10ம் பக்கம் பார்க்க)

## "வடக்கிலிருந்து படைகளை விலக்கும் அவசியமில்லை"

### –அமைச்சர் லலித்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு புதிய வழியொன்று பிறந்துள்ளதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி கூறியுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் அவசர காலச்சட்ட நீடிப்பு சம்பந்தமாக நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே திரு லலித் இவ்வாறு கூறினார்.

மற்றைய தரப்பினர் வன்செயலில் ஈடுபடாதிருக்கும் வரை பந்தோபஸ்துப் படைகளும் வன்செயலில் ஈடுபடமாட்டாது என்றும்; வட பகுதியிலிருந்து படைகளை வாபஸ் பெறும் அவசியம் அரசாங்கத்திற்கு இல்லையென்றும் அவர் அங்கு தெரிவித்தார். (து)

## இலங்கை அரசு ஈழம்புலிகளை ஏமாற்றுதவரை போர் நிறுத்தத்துக்கு ஆதரவு

### கருணாநிதி கருத்து

(சென்னை

இலங்கையில் ஏற்பட்டுள்ள போர் நிறுத்தத்தை இந்திய அரசின் உதவியுடன ஈழம் புலிகளை ஏமாற்ற இலங்கை அரசு பயன்படுத்தாத வரையில் தாம் அதனை வரவேற்பதாக தி மு க தலைவர் கலைஞர் திரு. மு.கருணாநிதி கூறியிருக்கிறார்.

முன்பு வட்டமேசை மாநாட்டின்போது செய்ததைப்போல தனது வலுவை பெருக்கிக் கொள்ள இலங்கை அரசு போர்நிறுத்தத்தை பயன்படுத்தக் கூடுமாதலால், போர் நிறுத்த விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கை வேண்டுமென்று திரு கருணாநிதிநேற்றுசென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியிருக்கிறார்.

(10ம் பக்கம் பார்க்க)

## இவர்கள் நாளை உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் ஐக்கிய வியாபாரச்சங்கம் மூடப்படவுள்ளதால் அதில் கடமையாற்றிய சுமார் 200 ஊழியர்கள் நாளை 24 ம் திகதி உண்ணாவிரதம் இருக்கப் போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய வியாபாரச் சங்கத்தில இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களைத் தொடர்ந்தே

[10-ம் பக்கம் பார்க்க]

## "அரசுக்கும் தீவிரவாதிகளுக்கும் ஆயுத விநியோகம் ஒருவரே செய்கிறார்"

### சபையில் தினேஷ்

(கொழும்பு

"அரசாங்கத்துக்கும் தீவிரவாதிகளுக்கும் ஒருவரே ஆயுத விநியோகம் செய்து வருகின்றார். இதனால் அரசாங்கம் வாங்கும் ஆயுதங்களின் சகல தன்மைகளையும் தீவிரவாதிகள் அறிந்து வைத்துள்ளார்கள். அவரது பெயரை நான் குறிப்பிடவில்லை அவரது பெயர் இங்குள்ள எல்லோருக்கும் தெரியும் என்று மக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "அரசாங்கம் தமிழ்த் தீவிரவாதிகளுக்குக் கொடுத்த வாக்குறுதிகள என்ன என்பதினை அறிவிக்கவேண்டும்.

[10-ம் பக்கம் பார்க்க)

## 119 பிரயாணிகளுடன் விமானம் கடத்தப்பட்டது

(சென்னை).

119 பிரயாணிகளுடன் சென்ற நோர்வே விமானம் ஒன்று கடத்திச் செல்லப்பட்டதாக நோர்வே செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

உள்ளூர் சேவையில் ஈடுபட்டிருந்த இந்த விமானத்தைக் கடத்தியவர்கள், நோர்வே வாசிகள் என்றும்;இந்த விமானம் ஒஸ்லோவிசன் பிரதான விமான நிலையத்தில் தரித்து நிற்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## பங்களாதேஷில் மீண்டும் பேரழிவு

[டாக்கா]

பங்களாதேஷில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் சுமார் பத்து லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

25 ஆயரத்துக்கு அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் 79 ஆயிரம் பேர் வெள்ளத்தால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெவிக்கப்பட்டது.

ஒரு மாதத்தில் பங்களாதேஷில் ஏற்பட்டுள்ள இரண்டாம் பேரழிவு இது என்பது குறிப்பிடத்தக்கது. [ரா]

## சிறுபான்மையினர் உரிமை அமெரிக்காவில் எப்படி?

### அறிவதற்கு குழு செல்கிறது

(கொழும்பு)

அமெரிக்காவில்சிறுபான்மை மக்களின் மனித உரிமைகள் எவ்வாறு பேணப்படுகின்றன என்பதை அறிந்து கொள்வதற்காகப் பிரதி அமைச்சர் திரு. ஷெலடன் ரணராஜா தலைமையில் விசேட குழுவொன்றுவிரைவில் அமெரிக்கா செல்லவுள்ளது

இக்குழுவில் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனத்தைச்சேர்ந்த சட்ட அறிஞர்களும் இடம் பெறவுள்ளனர்

நீதி அமைச்சின் சிரேஷ்ட உதவிச்செயலாளர் திருமதி ரி. விஜயதிலக, உதவிசட்டவரைஞர் திருமதி எம் இராமநாதன், பிரதி சொலிஸ்ட்ர் ஜெனரல் ஜனப் சிட்லி அஸீஸ் ஆகியோர் இக்குழுவில் இடம் பெறுகின்றனர்.

மனிதஉரிமைகளைக்கொண்ட பாதுகாப்பான அமைப்பை எப்படி உருவாக்கலாம் என்ற நோக்கம்கருதி இக்குழு அமெரிக்கா செல்கிறது.

இது சம்பந்தமாக திரு நீலன் திருச்செல்வம் கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையில்

(10-ம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சிக்கு இந்தியா வேண்டுகோள்

(புதுடில்லி)

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நல்லசூழ்நிலையை ஸ்ரீலங்கா சுதந்திரகட்சிதமது இலாபத்துக்காக பாழாக்கவேண்டாம் என்றுஇந்தியா ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக நம்பப்படுகிறது.

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. கிலோ ரூ. 250/- பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 3877

திண்டுக்கல் 2 அடி இரும்புப் பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி க. இராஜேஸ்வரி, பார் மணியம் வீதி, தெல்லிப்பழை. 3908

எழுதுமட்டுவாள் புகையிரத நிலையத்துக்கு அருகில் ஐம்பது (50) பரப்பு தென்னந் தோட்டக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு. மலிவாகப்பெறலாம். உடன்கடிதத்தொடர்பு கொள்ளவும்: விளம்பர இல. 3921 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3921

BROILERS இறைச்சிக் கோழிகளை எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைசந்தையடி, நல்லூர். 3953

ஜேர்சிப்பசு 12 போத்தல் பால் எடுக்கக்கூடியது 1 மாதக் கன்றுடனும், தர்பஹர் 6 மாதச் சினையுள்ளதும், ஊசி போட்ட கன்னிப்பசுவும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 142, அரசடி ரோட், கந்தர் மடம். (3984)

வீடியோ டெக் நெசனல் N.V 340 புதியது விற்பனைக்குண்டு. தயாளன் இஸ்டோர், பலாலி ரோட், கோண்டாவில் சந்தி. (3976)

Hitachi மியூசிக் செண்டர், வயிரமான பனையில் சீவிய மிகுதியாக உள்ள சிலாகை, மரங்கள் விற்பனைக்குண்டு: 18, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம். (3959)

தெல்லிப்பழை றெயில்வே ஸ்டேசனுக்கு அண்மையில் 3 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் க. ஆறுமுகம், ஆனந்தபவனம், சீமெந்து வியாபாரம் பிரதான வீதி, தெல்லிப்பழை. 3970

மூளாய் ஆஸ்பத்திரி, தபாற்கந்தோர், பஸ் தரிப்பு ஆகியவற்றிற்கு அண்மையில் சகல வசதிகளும் உள்ள வீடும் 3 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-பொ சிவபாலன், சட்டத்தரணி, சித்தங்கேணி. (3928)

தாவடி பத்திரகாளி ஒழுங்கையில் காசிப்பிள்ளை [கடைக்காரர்] வீட்டிற்குப் பின் புறமாக 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும்: நடராசா சுந்தரலிங்கம், புகையிரத வீதி, யாவிட்டபுரம், தெல்லிப்பழை. [3981]

மினி தியேட்டருக்குத் தேவையான 5X5 திரையுடன்கூடிய லென்ஸ் மற்றும் சகல உபகரணங்களும் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: S M சிவமூர்த்தி, கலா வீடியோ சென்ரர், கந்தசாமி கோவிலடி, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. 3967

National மூன்று கதவு குளிர் சாதனப் பெட்டி, National 2 பிரஷ் நிலபொலிஷர், கண்ணாடி கபினட், In desit 4 பளேட் மின்சார குக்கர் ஒவனுடன், இரண்டு தேக்கு Vono ஸ்பிரிங் கட்டில்கள், National Panasonic Music Centre ஸ்பீக்கர், இருபுக்காசுப்பெட்டிஆகியன விற்பனைக்குண்டு. MRS இராசநாயகம், 14/1, முதலாவது ஒழுங்கை, [வலது] பொற்பதி ஒழுங்கை, கொக்குவில். (3924)

## கல்வி

G.C.E. (O.L.)ல் கட்டாய பாடமாகிய கணிதம். 16 வருட அநுபவமுள்ள ஆசிரியரினால், ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்குக் குறைந்த காலத்தில் வீடுகளிற் சென்று கற்பிக்கப்படும் ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (3974)

## வாடகைக்கு

சுண்டுக்குளிப் பகுதியில் சகல வசதிகளும் உள்ள பெரிய வீடு ஆடிமாதம் தொடக்கம் வாடகைக்கு உண்டு விசாரிக்கவும்: 36, சந்தனமாதா கோவில்வீதி, பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம். (3957)

## தவறிவிட்டது

7 ஸ்ரீ 7266 இலக்கம் கொண்ட சுசுக்கி சிவப்பு நிற மோட்டார் சயிக்கிள், இரத்தினசோதி, 164/10, பஞ்சரத்னம் வழி, கச்சேரி - நல்லூர் வீதியில்உள்ள வீட்டில் இருந்து காணாமல் போய்விட்டது. எடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். (3958)

## தேவை

முந்திரிகைத் தோட்டத்தில் வேலை செய்யக் கூடிய 15வயதுக்குட்பட்ட பையன் அல்லது 50 வயதிற்கு மேற்பட்ட குடும்பப் பொறுப்பற்றவர் தேவை உணவு, இடவசதி வழங்கப்படும். கடித மூலம் அல்லது நேரில் தொடர்பு கொள்ளவும். நேரில் 1985-06 30-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை சந்திக்கலாம். முகவரி:கனகராசா அரியரத்தினம், செல்வநாயகம்வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (3881)

Air Compressor குறைந்தது 100 P. S. I. அமுக்கமும் 200 C F. M. காற்றை வெளித்தள்ளவும்கூடிய பெரிய அளவிலான எயர் கொம்பிறசர் ஒன்று உடனடியாகத் தேவைப்படுகிறது. மாரியம்மன் மோட்டர்ஸ், கோப்பாய் தெற்கு, கோப்பாய். 3956

ரேனியோ, தட்டச்சு இயந்திரங்கள் பழுது பார்க்கக்கூடியவர்களும், கார் மெக்கானிசம் தெரிந்தவர்களும், தங்களது சகல விபரங்களையும் எழுத்து மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்: S. P. S. இளங்கோ, 60/2, யாழ் இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 3910

எமது கொழும்பு கிளை ஸ்தாபனத்துக்கு உதவி முகாமையாளர், உதவியாளர், தேவை ஆங்கிலம், கணக்கியல் அறிவு அவசியம். தங்குமிடவசதி அளிக்கப்படும் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு எஸ் சுப்பிரமணியம் அன்ட் கொம்பனி 53 K. K. S. வீதி, யாழ்ப்பாணம். 3927

அரிசி மில் இயந்திரம், இஸ்டீம் போயிலர், றய்யர் மேற்குறிப்பிட்ட இயந்திரங்கள் உடன் தேவை. 25-6 85க்கு முன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 3966, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3966

## காணவில்லை

கோவில் நாகு (J C) பசுக்கன்று மண்ணிறம் (வெண்மை கலந்தது) உயரம்: 3 அடி 15-6-85 சனிக்கிழமை தொடக்கம் காணவில்லை. கண்டுபிடித்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு அறிவிக்கவும். எஸ். ஆறுமுகம் (சிவம்), 53, ஆடியபாதம் வீதி' திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (கல்வியங்காடு சந்தைக்கு அருகாமையில்) 3955

## மட்டு — யாழ் பஸ்சேவை

(மட்டக்களப்பு)

தற்போது இடை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் மட்டக்களப்பு-யாழ்ப்பாணம் பஸ் சேவையைமீண்டும் ஆரம்பிக்குமாறு மட்டக்களப்பு அம்பாறை பிரயாணிகள் சாரிபில் மட்டக்களப்பு அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை தபாலதிபர் திரு. இ. திருநாவுக்கரசு இந்தக் கோரிக்கையை மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு அந்தோனிமுத்து மற்றும் சம்பந்தப்பட்டவர்களிடம் விடுத்துள்ளார்.

## மணப்பந்தல்

அரசாங்க சேவையிலுள்ள 34 வயதுள்ள உயர் வேளாள குலத்தவருக்கு ஏற்றமணமகள் தேவை தொடர்பு:-திரு எஸ். சுவாமிநாதன், 15/4, முருகேசர் லேன், நல்லூர். [3973]

38 வயது இந்து வேளாளர் குல நற்பண்புகள் கொண்ட பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு வரன் தேவை. சீதனம்: வீடு, நகை, ரொக்கம். இவருக்குமுன்னர் இளைய சகோதரனுடனான மாற்று சம்பந்தமும் கவனத்துக்கு எடுக்கப்படும் தயவு செய்து சாதகப் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 3982 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [3982]

யாழ் இந்து உயர்குல 30வயதுடைய, அரச வங்கியில் கடமையாற்றும் இளைஞருக்கு, 27 வயதுக்கு உட்பட்ட அழகும், கல்வியறிவும் உள்ள மணமகள் தேவை. குடும்ப விபரம், ஜாதக குறிப்பு, சீதன விபரம், அண்மையில் எடுத்த புகைப்படம் என்பவற்றுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல 3860 C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். [3860]

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன்
த. சுகிதன் (சுகி)

வேலணை கிழக்கு செல்வநாயகம் வீதியை சேர்ந்த சி. செ. தணிகாசலம் கல்பனாதேவி தம்பதிகளின் அருமைப் புதல்வன் சுகிதன் (சுகி) தனது முதலாவது பிறந்ததினத்தை கொழும்பு கழுத்மாவத்தையிலுள்ள இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை வேலணை தவிடு தின்னிப் பிள்ளையார் அருள் பெற்று கல்வி செல்வம் வீரம் நிறைந்த வளமுடன் நீடூழி வாழ

ஆசை அப்பா,
அன்பு அம்மா,
அருமை உற்றார்,
உறவினர்.
வாழ்த்துகிறார்கள்

3871

## இன்று கொடியேற்றம்

(வண்ணார்பண்ணை)

கோப்பாய் அருள்மிகு வெள்ளெருவைப் பிள்ளையார் கோவில் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 1ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

## பொலிஸ் கான்ஸ்டபிள் வெட்டிக் கொலை

[கொழும்பு]

திஸமாராகம பொலிஸ் விடுதியில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

முன்பு வனஸ்முல்ல பொலிஸ் நிலையத்தில்கடமையாற்றிய இவர் அண்மையில் தான் இப்பகுதிக்கு இடமாற்றம் பெற்றிருந்தார்.

## சாவகச்சேரி
## ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தானம்
## அலங்கார உற்சவம்

அன்புடையீர்!

26-6-85 புதன்கிழமை முதல் 5-7-85 வெள்ளிக்கிழமை வரை 10 நாட்கள் தினசரி துர்க்கை அம்பாளுக்குப் பிற்பகல் 3-00 மணிமுதல் விசேட அபிஷேகமும் பூஜையும் அம்பாள் திருவீதியுலாக்காட்சியும் நடைபெறும் அனைவரும் வந்து துர்க்கை அம்பாளின் திருவருளைப் பெறுக.

குறிப்பு: 11-7-85 லர்ச்சார்ச்சனை ஆரம்பித்து ஆடிப் பூரத்தினத்தன்று 21-7-85 ஞாயிற்றுக்கிழமை பூர்த்தி அடையும் தற்போதையநாட்டுநிலைமைகளைமுன்னிட்டு சுருக்கமான முறையில் நேரத்துடன் உற்சவம் நடைபெறும்.

இங்ஙனம்
தர்மகர்த்தா.

3698

## வீடுகள் தேவை

சுண்டுக்குளி அல்லது கிட்டிய பகுதிகளில் பின்வரும் நோக்கங்களுக்காக வீடுகள் தேவைப்படுகின்றன. உடனே தொடர்பு கொள்ளவும்.

(1) தனியார் நிறுவனமொன்றின் பாவனைக்கு
(2) தொழில் பார்க்கும் இளம் தம்பதியின் வதிவிடத் தேவைக்கு.
(வீட்டின் ஒரு பகுதியாயினும் ஏற்கப்படும். குழந்தைகள் இல்லை)

விளம்பரதாரர்:
M 15, மே/பா Dyn Ads,
476, பிரதான வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

3979

## மின் மோட்டர்கள் (Electric Motors)

தேவை: 3 H. P. சக்திக்கு உட்பட்ட, 50 R. P. M., 3 phase மின்மோட்டார் தேவை. (புதியது அல்லது பாவித்தது)

விற்பனைக்கு: 25 H P. 1440 R. P. M., 3 phasse மின் மோட்டர்விற்பனைக்குண்டு பிரித்தானிய உற்பத்தி. நல்ல நிலையிலுள்ளது.

பின்வரும் முகவரிகளில் ஒன்றில், உடனே தொடர்பு கொள்ளவும்:

எவர்சில்வர் இன்டஸ்றீஸ்,
கைத்தொழிற் பேட்டை, அச்சுவேலி.
Dyn Ads, 476, பிரதான வீதி,
சுண்டிக்குளி.

3980

## எவர்சில்வர்ப் பாத்திரங்கள்!

யாழ். நகரில் எல்லாவிதமான "சங்குமார்க்" எவர்சில்வர் பாத்திரங்களை மொத்தமாகவும், சில்லறையாகவும், மிகக் குறைந்த விலையில் தெரிவுசெய்ய தலைசிறந்த ஒரே ஸ்தாபனம்

## செல்லாசன்ஸ்
### சேல்ஸ் சென்ரர்,
### 118, காங்கேசன்துறை வீதி,
### யாழ்ப்பாணம்.

"வியாபாரிகளுக்கு அதிவிஷேட கழிவுண்டு"

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



ஈழநாடு
வாரமலர்
EELANADU VARA MALAR

# ஐரோப்பிய வரலாற்றிலும் காணமுடியாத வீரன் இராஜராஜன்

க. சி. குலரத்தினம்

[தமிழ்நாட்டில் பல்லவப் பேரரசர்களின் பின்பைந்தமிழ் வேந்தராய இடைக்காலச் சோழர்விஜயாலயன் முதல்வனாக வீறுகொண்டெழுந்தனர். விஜயாலயன் மரபில் வந்த சுந்தரசோழனின் மைந்தனாய், அருள் மொழித்தேவன் என்னும் பிள்ளைத் திருநாமம் உள்ளவனாய் 985 ஆம் ஆண்டில் தஞ்சையில் முடிசூடியவனுமாய இராஜராஜ தேவர் விழா இந்த ஆடி மாதத்து முற்பகுதியில் (26-6-85) வரவேண்டும். அவனின் ஆயிரம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் ஆய்வுக் கட்டுரை இன்று ஆரம்பிக்கிறது.]

உலகமெங்கும் வியாபித்த குடியேற்ற நாடுகள் பலவற்றைக் கட்டியாண்ட பிரித்தானிய பேரரசு ஆதியில் இங்கிலாந்து என்னும் பெயரில் 1485இல் முதன் முதலாக ஒரு நிலையான அரசை ரியூடர் வம்சத்தவரான ஏழாம் ஹென்றி என்பாரின் தலைமையில் அமைத்து ஐந்நூறு ஆண்டுகள் ஆகின்றன.

ஆனால் இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் 985இல் முடிசூடிய சோழப் பெருமன்னனாகிய இராஜராஜனுக்கு முன்னரே தமிழ்ப் பேரரசு உலகமறிய நிலவியதாகும். இடைக்காலச் சோழர் எனப் பெயர் பெற்ற சோழப் பெருமன்னர்கள், நானூறாண்டுகளுக்கு மேலாகத் தெற்கு தென்கிழக்கு ஆசிய நாடுகள் எங்கும் தங்கள் பெருமை கொடிவிட்டுப் பறக்கப் பெருநிலப்பரப்பினை அகண்டபாரதம், தீவாந்தரபாரதம் என வழங்க ஆண்டுவந்தனர்.

சோழர் குலத்தில் தோன்றிய அருள்மொழித்தேவன் என்னும் இராசராசனைப் போன்ற வீரன் ஒருவனை ஐரோப்பிய வரலாற்றிலேயும் காணமுடியாது. அவன்பேரரசன், பேரறிஞன், பெரும் பக்தன், பெருவீரன், பெரும் புலவன், பெருங்கலைஞன், பெரும் புரவலன் என்றெல்லாம் பெருந்திருவாளன். வரலாற்றில் முதன் முதலாக மெய்க்கீர்த்தி என்னும் செப்பேட்டு எழுத்து மூலம் சரித்திரம் நிலைக்கச் செய்தவனும் அவனே. இராஜராஜன் சைவம் வளர்த்தவன். தமிழ் வளர்த்தவன், கலைகள் வளர்த்தவன். நாட்டை வளர்த்தவன். ஏழைகள் அனுதர்களை வளர்த்தவன். ஈரநெஞ்சினன். யாதும் குறைவிலன் அவன் பல நாடுகளை வென்றவன் நம்மையும் வென்றவன். சிவாலயங்களையும் தெய்வத் திருவுருவங்களையும் கலைநயம் ததும்பத் தந்தவன்.

இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றி என்னும் மன்னன் பதினாறாம் நூற்றாண்டில் நம்பிக்கையின் பாதுகாவலன் [Defender of Faith] என்னும் கருத்தில் F. D. பட்டம் பெறுவதற்குப்பன்னூறாண்டுகளுக்கு



இது தரையில் நிழல்விழாத தஞ்சைப் பெரிய கோயில். சைவசமயத்தினதும் தமிழ் இனத்தினதும் கலாசாரத்தையும் கட்டட, சிற்ப நிபுணத்துவத்தையும் பறைசாற்றி நிற்கும் இக்கோயிலைக் கட்டுவித்தவன் பெருமன்னன் இராஜராஜசோழன்.

முன்னரே சேர, சோழ, பாண்டியர்கள் சமயத்தின் பாதுகாவலராயிருந்தனர். திருமுறைகளை அருளிய மெய்யடியார்கள் வரிசையில், சேரமான் பெருமான் நாயனாரும், கண்டராதித்ததேவரும் குறிப்பிடத்தக்க குலமன்னர்களாவர். இருவரும் சிவபூசாதுரந்தரராய்ச் சிவபூசையில் திருச்சிலம்பொலி கேட்டு மகிழ்ந்த சித்தையராவர்.

இராஜராஜன் தன் பெயருக்கேற்ப இராசாக்களுக்கு இராசா அவன் வென்ற நாடுகளில் எங்கும் சிவாலயங்கள் அமைத்துச் சைவம் வளர்த்ததோடு, பிறமதத்தவர்களையும் உபசரிப்புகள் கொடுத்து ஆதரித்தவன்.

சைவத்திருமுறை ஏடுகள் யாவும் எடுப்பார், படிப்பார் அறியாவண்ணம் மண்மூடிக் கிடந்த சூழ்ச்சியை அறிந்து அவற்றை வெளிக்கொணர்வதற்குத் திருமுறை தந்த பெரியவர்களுக்குப் பெருவிழா வெடுத்துத் திருமுறைகளைக் கைப்பற்றித் தக்க பெரியவரான நம்பியாண்டார் நம்பிகளைக்கொண்டு முறையாகத் தொகுப்பித்துப் பண்ணடைவும் செய்வித்தவன். திருக்கோயில்கள் தோறும் நித்திய நைமித்தியவிழாக்களின்போது திருமுறையோதுதற்கு பிடாரர்கள் என்றும் ஓதுவார்கள் என்றும் வழங்கும் திருக்கூட்டத்தாரை நியமித்து அவர்களுக்கு யாதுங்குறைவின்றித் தாராளமாக வழங்கியவன். திருமுறைகள் மூலம் தமிழன் கண்ட பண்ணிசையை நிலவச் செய்ததோடு சைவசமயத்தவர்களின் சிறப்பு நூலான ஆகமங்களையும் ஆராய்வதற்குத் தக்கவர்களை நியமித்தவன். சைவப்பண்பாட்டை எங்கும் தலைநிமிரச்செய்தவன். மகுடாகமத்தில் ஈடுபாடுகொண்டு ஆதாரமாகக்கொண்டு தஞ்சைக்கோயிலை அமைத்தவன்.

இராஜராஜப் பெருமன்னனுக்கு வேதம் வல்ல அந்தணர்கள் ஆசி கூறினார்கள். அவர்கள் அமைதியாக வாழ்ந்து வெண்ணூல் பூண்டு வேதமோதுவதற்கு வரியில்லாத நிலங்களும் வளங்களும் கொடுத்து மகிழ்ந்தான். அந்நிலங்கள் யாவும் வேதங்களின் பெயரால் சதுர்வேதி மங்கலம் முதலிய பெயர்கள் பெற்று வாழ்வளித்தன.

இராஜராஜனுக்குமிக அணுக்கமாக இருந்த பெருஞ் சைவக் குரு சர்வபண்டிதர் என்பவராவர், இன்னும் திருமுறைகளை வெளிக்கொணரவும் தொகுக்கவும் பாடிப் பெருக்கவும் துணை நின்றவர் நம்பியாண்டார் நம்பி என்னும் பிராமணோத்தமராவர். இன்னும் கருவூர்த்தேவர் என்னும் பெருஞ் சித்தரைத்தேடிக்கண்டு அவரின் ஆசிர்வாதமும் அருந்துணையும் பெற்றமை இராஜராசனின் பக்திநெறிக்குப் பலமூட்டியதாகும். கருவூர்த்தேவர் ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பா தொகுதியில் பத்துப் பதிகங்கள் பாடியருளியவர், அன்று இராஜராஜன் அமைத்த கலைவளம் மிகுந்த தஞ்சைக் கோயில் என்னும் பிரகதீசுவரர் ஆலயத்தின் பிரதிட்டைக் கிரியையில் அஷ்டபந்தனம் என்னும் மருந்தைப் பதப்படுத்திக் கொடுத்தவர். இன்னும் இராசராசனின் தந்தை வழியால் உறவினரான கண்டராதித்தர் என்னும் பெருவேந்தரின் பெருந்தேவியரான செம்பியன் மாதேவியார் என்னும் பாட்டியாரும் இராசராசனை உருவாக்கிய உத்தமர்களில் ஒருவராவர். இராசராசனின் உடன் பிறந்த தமக்கையார் குந்தவைப் பிராட்டியார் திலகவதியார் போன்ற செம்மனச்செல்வியாய்த் தம்பியார் உளராதல் வேண்டுமென்னும் பெருந்தயா கொண்டிருந்தவராவர். சத்தியத்தேவன் என்னும் பெருவீரனை மணாளனாகக் கொண்ட குந்தவைப் பிராட்டியார் தம்பியார் மீதுகொண்ட அன்பின் ஆழத்தைத் தம்பியார் நன்கறிந்தவன். சக்கரவர்த்தியின் திருத்தமக்கையார் என்றும், அக்கன் என்னும் பயபக்தியோடும் அன்போடும் பழகியதோடு, தான் கோயில்களுக்குக் கொடுத்தவற்றைக் குறித்த இடத்து அடுத்த வரியில் தமக்கையார் கொடையை எழுதிவித்தவன். இதைவிரித்த விளக்கில் 'யாம் குடுத்தவையும் அக்கன் குடுத்தவையும் பெண்டுகள் குடுத்தவையும்'' எனப் படியெழுதிவித்தான். பெண்டுகள் என்பவர் அவரின் மனைவியராவர்.

(தொடரும்)

## பகைமை பற்றிய பரிசோதனை

துரியோதனனும் தர்மரும் ஒரே ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள். துரோணர் என்ற ஒரே குருவிடம் படித்தவர்கள்.

குருவின் ஆணைப்படி நல்லவன் யாராவது உண்டா வென்று உலகில் தேடிப்பார்த்த துரியோதனனுக்கு நல்லவன் யாரும் தென்படவில்லை.

தர்மருக்கோ கெட்டவன் யாரும் அதே உலகில் அதே காலத்தில் அகப்படவில்லை.

நலம், கேடு எங்கேயிருக்கின்றன? ஆதிகாலத்தில் தோன்றிய இந்த விசாரணை இந்த நாட்டில் இன்றுவாழும் மக்களுக்கு முன் வைக்கப்பட்டிருக்கிறது.

புராண இதிகாசப் புளுகு எமக்கு வேண்டியதில்லை என்னும் கரம்புகள் இன்று வீரியம் பேசுவது பொறுப்புடைமையாகாது. சான்றோர் உரைப்பதை பணிவுடன் புரியவேண்டியிருக்கிறது.

பண்டைய சீனாவில் மக்கள் மூன்று வகையெனக் கொள்ளப்பட்டது. உத்தமர் உயர்ந்த கருத்துக்களை ஆராய்வதில் காலம் கழிப்பவர். இடைத்தரத்தோர் நிகழ்வுகளை வியாக்கியானம் செய்பவர். அதமம் செய்வதென்ன? தனிப்பட்டவர் பற்றி வம்பளப்பதே.

பகைமைக்கு இருப்பிடம் எது என்பது புலப்படுகிறது. கோபம் பாவம்; தனிமனிதனை மட்டுமல்ல சமூகத்தை, நாட்டைக் கெடுக்கவல்லது.

ஔவை மூதாட்டி இதனை உரைகல்லாகக் கொண்டு மூன்று வித மனிதரை இனங்காண்கின்றார்.

கீழ்த்தரமானவர் கோபத்தால் வேறுபட்டால் கல்லின் பிளவுபோலத் திரும்பக்கூடார். இடைத்தரத்தோர் வேறுபட்டகாலத்தில் பொன் பிளவுபட்டது போல ஒருவர் கூட்டக்கூடுவர். உத்தமராகிய சான்றோர் சினம் அம்பால் பிளவுபட்ட நீரைப்போல உடனே நீங்கும்.

## தீயவை அகற்றும் மாவையூர் முருகன்

கற்றவர் நிறைந்த ஊராம்
கலையெலாம் வாழும் ஊராம்
உற்றநல் விருந்து பேணும்
உயர்பண்பாற் சிறந்த ஊராம்
நற்றவம் மிகுந்த ஊராம்
ஞானமே சிறந்த ஊராம்
பொற்புறு தெய்வ பக்தி
பொருந்திடும் மாவை ஊரே.
தீயவை அனைத்தும் நீக்கிச்
செகத்தினைக் காத்தல் செய்யும்
மாவையம் பதிவாழ் கந்தன்
திருவிழாக் காண்போர்க்குற்ற
பாவம் போம் பிணிகள் நீங்கும்
பல்கிடும் துயர்கள் மாறும்
மேவுமே செல்வம் யாவும்
மேனிலை எய்தும் நன்றே

ம. பார்வதிநாதசிவம்

# எமது சிறுகதை

## ஊமைக்குயில்

சாந்தி

தடார் என்ற சத்தத்தைக் கேட்டு டேவிட் விழித்துக் கொண்டான். பக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்த ராஜியைக் காணவில்லை, மனம் 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது.

''ராஜீரா...ஜீ ராஜீ'' என்று பலமாகக் கத்தினுன் டேவிட். ராஜியைக் காணவில்லை. சத்தம் கேட்ட திசையை நோக்கி விரைவாக ஓடினுன். அங்கே ராஜி விழுந்துகிடந்தாள் ஓடிப்போய் ராஜியைத் தூக்கிய அவன், ''என்ன ராஜி, என்ன நடந்தது'' என்று பதற்றத்துடன் கேட்டான் டேவிட்.

''ஒண்டுமில்லை அங்கிள், சறுக்கிவிழுந்திட்டன்'' என்று மிகச் சாதாரணமாகச் சொன்னுள் அவள்.

''ராஜி. அங்கிள் உன்னை குளிக்கவாத்திருப்பனில்ல?'' என்று டேவிட் செல்லமாகக் கடிந்தான்.

''நீங்க நித்திரையாயிருந்தீங்கள். ஸ்கூலுக்கு நேரமாச்சு, அதுதான் நானே குளிக்க வந்தனுன். ஐ ஆம் வெரி ஸொறி அங்கிள்'' என்று குழைந்தாள் ராஜி.

தாய் தந்தை தன்னுடன் இல்லையென்பதை ராஜி நினைத்துக் கொண்டாளோ? எதையும் தானே செய்யவேண்டும்; எவருக்கும் கஷ்டம் கொடுக்கக் கூடாது என்று நினைத்தாளோ?...

அவள் தனிமையை உணரக் கூடாது என்று அவன் மிகவும் கவனமாக நடந்து கொள்கிருன். ராஜியை நினைத்தபடியே டேவிட் சிந்தனையில் ஆழ்ந்தான்.

ராஜி அவனுக்கு பிரச்னைப் பொருளா? இல்லவேயில்லை. டேவிட் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பது ராஜிக்காகத்தான். ''தங்கையின் குழந்தைக்காகத் தன் வாழ்வை கெடுத்துக் கொண்டவன்'' என்று ஊர்சொன்னது. ராஜியேதான் உலகம் என்று உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிருன் டேவிட்.

வசதியான குடும்பத்தில் டேவிட் பிறந்தான். பாசம் என்ருல் என்ன என்று டேவிட்டையும் மேரியையும் பார்ப்பவர்கள் புரிந்துகொள்வார்கள். தங்கை மேரி மீது டேவிட் உயிரையே வைத்திருந்தான். மேரி மிகவும் கெட்டிக்காரி. பல்கலைக்கழகம்சென்ருள் மேரி. தங்கையின் கல்வி மீது அதிக ஆர்வம் காட்டினுன் டேவிட்.

மேரி, பல்கலைக்கழகத்தில் பிரபுவைச் சந்திக்க நேர்ந்தது. சந்திப்புக்கள் நட்பாக மாறிக் காதலாய் மலர்ந்தது.

மேரி ஒருகிறிஸ்தவப்பெண். பிரபு ஹிந்து. மேரியின் வீட்டிலோ பிரபுவின் வீட்டிலோ இக் காதலுக்குச் சம்மதம் கிடைக்கவில்லை. மாருக, எதிர்ப்புத் தோன்றியது. மேரி பெற்ருேரையும் தன் அண்ணன் டேவிட்டையும் எதிர்த்துக்கொண்டு காதலித்தவனையே கைப்பிடிப்பேன் என்று- பிரபுவுடன் பிறந்த ஊரை விட்டுச்சென்ருள்.

ஜாதி, மதம், அந்தஸ்து எல்லாவற்றையும் வேரோடு களைந்து எறிந்துவிட்டுப் பெற்றவர்களின் இதயத்தையும் புண்ணுக்கிவிட்டு வேறுவீடு நோக்கிச் சென்றுவிட்டாள். பிறந்தது முதல் கணம் கூடப் பிரியாமல் இருந்தவள் எல்லோரையும் கலங்க வைத்துவிட்டுச் சென்றுவிட்டாள். தங்கையின் பிரிவை டேவிட்டால் தாங்க முடியவில்லை. தங்கையைப் பார்க்கவேண்டும் என்று சில நேரங்களில் நினைப்பான். கஷ்டப்பட்டுத் தன் ஆவலைக்கட்டுப்படுத்துவான்.

'மேரி, என்னைவிட்டுப்போக உனக்கு மனம்வந்ததா? இல்லை நேற்று வந்தவன் உன்மனதை மாத்திப்போட்டானு? உனக்காக ஒவ்வொரு நாளும் கண்ணீர் சிந்திக் கொண்டு இந்த அண்ணன் இருக்கிருன் என்பது உனக்குத் தெரியாதா?'' என்று வாய்விட்டு அழுவான்டேவிட்.

ஒருநாள் கோவிலொன்றில் மேரியைக் கண்டான் டேவிட். நெற்றியிலே பெரிய அளவில் குங்குமம், தலையிலே நிறைய மல்லிகைப்பூ. அழகான ஒரு சிவப்பு நிறச்சேலை. முற்றுமுழுதாக ஒரு ஹிந்துவாக மாறியிருந்தாள் மேரி. அவள் தாய்மையடைந்திருக்கின்ருள் என்பதை அவள் முகப்பொலிவு காட்டி நின்றது. ஓடிச்சென்று 'மேரி' என்று கதறவேண்டும் போல் இருந்தது டேவிட்டிற்கு.

இரத்த பாசம் இதழில் ஒரு புன்னகையைக் கொண்டு வந்து நிறுத்தியது. மேரியின் கண்களிலிருந்து நீர் வடிந்தது. டேவிட்டால் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

''மேரி...மேரி.. மே...ரி'' என்று அழுதே விட்டான் டேவிட். மதம் மாறினுல் மனமும் மாறுமா என்ன? டேவிட்டும் மேரியும் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். மேரியிடம் இருந்து டேவிட் விடை பெறும்போது மேரி சொன்னுள்.

''அண்ணு, என்னேட நீங்க பேசினதாக அம்மாவிடம் சொல்லாதீங்க. அப்புறம் உங்களை அம்மா திட்டுவா''

இந்த வார்த்தைகள் அவள் சுமங்கலியாக இறுதியாக பேசும் வார்த்தை என்று டேவிட் நினைக்கவில்லை.

அடுத்த நாள் விபத்து ஒன்றில் பிரபு இறந்துவிட்டதாக நண்பன் ஒருவன் மூலமாக அறிந்தான் டேவிட். இதயமே சுக்கு நூருகிவிடும் போலிருந்தது. 'மேரிக்கு இந்த அதிர்ச்சியை தாங்கக் கூடிய பலம் இருக்குமா?'-பலவாறெல்லாம் டேவிட்டின் எண்ணம் அலைமோதியது.

மேரியைக் காண அவன் வீட்டிற்கு ஓடினுன் டேவிட். மேரி பிரமை பிடித்தவள் போல் இருந்தாள். சுயநினைவு அற்றிருந்த மேரி அவனை அடையாளம் கண்டு கொள்ளவில்லை பிரபு இறந்த சில வாரங்களில் மேரியை தனியார் மருத்துவ மனையில் சேர்த்தான் டேவிட்.

காலங்கள் மிக வேகமாக உருண்டோடின ராஜி பிறந்தாள். குழந்தையைத் தலாட்டிச் சீராட்டி வளர்க்கும் மனேநிலை மேரியிடம் இல்லை. அவள் யாரிடமும் பேசுவதில்லை. அவள் எதையுமே வெறித்தபடிபார்த்துக்கொண்டிருப்பாள். மொத்தத்தில் தனக்கு ஒரு குழந்தை இருப்பதாக அவளுக்கு நினைவில்லை ராஜியை ஒரு தாதியின் உதவியுடன் டேவிட் தன் வீட்டிலே வளர்த்து வந்தான். இடையிடையே மேரியைப் பார்க்க மருத்துவமனை செல்வான் டேவிட். ராஜியைப் பற்றி எதுவுமே மேரி கேட்பதில்லை. அவள் முன் ஒருவேற்று மனிதனைப் போல் நின்றான் மேரி.

மேரியைப் பரிசோதிக்காத டாக்டர்களே இல்லை. எதிர்பாராத அதிர்ச்சி மேரியின் மூளையைப் பாதித்துள்ளதாக டாக்டர்கள் கூறினுர்கள். காலம் இவளது நோய்க்குப் பதில் சொல்லும் என்று காத்திருக்கிருன் டேவிட்.

காலங்கள் உருண்டோடுவதைத் தடுக்கக் கடவுளாலும் முடியுமா? ஐந்து வருடங்கள் மிகவேகமாக உருண்டோடின. ராஜிக்கு இப்பொழுது ஐந்து வயது. தாயைப் பார்க்கப் போகின்றேன் என்று அடம் பிடிப்பாள். சமயத்தில் எதையாவது சொல்லிச் சமாளிப்பான் டேவிட். மாதத்தில் ஒரு தடவை ராஜியை மேரியிடம் கூட்டிச் செல்வான் டேவிட்.

''மம்மி'' என்று அழைத்துக் கொண்டு ஆசையோடு மேரியின் பக்கம் செல்வாள் ராஜி எதுவுமே எனக்குத் தெரியாது என்று கூறுவது போல் வெறித்த பார்வையுடன் இருப்பாள் மேரி.

இதனுலே தான் மேரியிடம் ராஜியை டேவிட் கூட்டிச் செல்வதில்லை. ஏமாற்றங்களைத் தாங்கக் கூடிய சக்தி ராஜிக்கு இல்லை. பிஞ்சுள்ளத்தில் ஏமாற்றத்தின் நிழல்கள் விழுவதை டேவிட் விரும்பவில்லை. கூடுதலானவரை தாயைப் பற்றிய ஏக்கம் குழந்தைக்கு வராமல் இருப்பதையே விரும்பினுன் அவன். ராஜியைப் பொறுத்தவரை தாயைப் பற்றிய எண்ணம் அவளிடம் ஆட்கொள்வதை டேவிட்டால் தவிர்க்க முடியவில்லை.

ஒருநாள் டேவிட் வேலைமுடிந்து வீட்டுக்குத் திரும்பினுன். வாசலில் ராஜி அவனின் வருகைக்காகக் காத்திருந்தாள்.

மேரியின் அதே பார்வை அதே முகம்- மொத்தத்தில் மேரியே சிறுபிள்ளையாய் நிற்கும் பிரமையே அவனுக்குஏற்பட்டது ஸ்கூட்டரை முற்றத்தில் நிறுத்திவிட்டு ராஜியைத் தூக்கினுன் டேவிட்.

''குட் ஈவினிங் அங்கிள்'' என்று கீச்சுக்குரலில் கூறியபடியே கலகலவென்று சிரித்தாள் ராஜி. என்ன வெண்மையான சிரிப்பு. இந்தச் சிரிப்பை அவன் சிரித்து எவ்வளவோ காலமாகின்றன. நெஞ்சிலே வேதனை இருக்கும் போது எப்படிச் சிரிப்புவரும். எதையெதையோ சிந்தித்தவன் ராஜியின் முகத்தைப் பார்த்ததும் சுயநினைவுக்கு வந்தான்.

''குட்ஈவினில் ராஜி'' என்று கூறியபடியே ராஜியை அணைத்தான் டேவிட்.

வீட்டில் சமையலுக்கு ஒரு பெண்ணை வைத்திருந்தான் டேவிட். டேவிட்டைக் கண்டதும் அந்தப்பெண் கோப்பி கொண்டுவந்து வைத்துவிட்டுப்போனுள். கையிலிருந்த பையை வைத்துவிட்டுக்கதிரையில் அமர்ந்தான் டேவிட். ராஜி டேவிட்டின் முகத்தையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் முகம் எதையோ கேட்க ஆவலாய் இருப்பதுபோல் தெரிந்தது.

''என்னம்மா ராஜி ஒரே ஹப்பியாகஇருக்கிருய்'' என்று கேட்டபடியே ராஜியின் கன்னத்தைக் கிள்ளினுன டேவிட்

''அங்கிள் நான்இண்டைக்கு உங்களோட மம்மியைப் பார்க்க வரப்போறன்''.

''வேணும்பா. அங்கிள் உன்னை எக்ஸிபிஷன் பார்க்கக் கூட்டிக்கொண்டு போறன்.''

ஆனுல் அவள் தொடர்ந்தும் அதையே கேட்டுக்கொண்டிருந்தாள். ராஜி மிகவும் பிடிவாதமாக இருந்தாள். டேவிட்டின் வேதனை ஆத்திரமாக மாறியது. அந்தப் பிஞ்சுக் கன்னத்தில்அடித்துவிட்டான். நீர் முட்டிய விழிகளுடன் ''மம்மி மம்மி'' என்று அழுதாள் ராஜி.

அவனுல் ராஜியைச் சமாதானப்படுத்த முடியவில்லை, ராஜியின் கன்னத்தில் விரல்கள் பதிந்த இடம் கன்றிச் சிவந்திருந்தது. இந்தப் பிடிவாதம் தான மேரி இன்று விதவைக் கோலத்துடன் பைத்தியம் பிடித்தவள் போல் இருப்பதற்குக் காரணம். அதே பிடிவாதத்தை ராஜியும் கொண்டிருந்ததை அவனுல் பொறுக்கமுடியவில்லை தன் வேதனையை கேவலம் ஒரு குழந்தையிடம் காட்டி விட்டோமே என்று அவன் மனம் ஓலமிட்டது. ராஜியை மெல்ல அணைத்தபடி ''அங்கிள் உனக்கு பொம்மை வாங்கித் தருகிறேன்'' என்று கூறினுன்.

''அப்போ எனக்கு அம்மாப் பொம்மை வாங்கித் தருவீர்களா அங்கிள்?', என்று கண்களில் கண்ணீர் மல்க கேட்டாள் ராஜி.

ராஜியின் கேள்வி டேவிட்டின் இதயத்தை நெருப்பாக்கி சுட்டது.

ராஜி எதை மறக்க வேண்டும் என்று நினைக்கிருனே அதையே அவள் நினைவில் கொண்டிருக்கின்ருள். ''உன் அம்மாவே பொம்மையாகத் தான் இருக்கிறு'' என்று கூற வேண்டும் போல் இருந்தது. டேவிட்டிற்கு. உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு அவளுக்கு அம்மாப்பொம்மை வாங்கித்தருவதாக வாக்களித்தான் டேவிட்.

அன்றிரவு டேவிட்டிக்குத் தூக்கம் வரவில்லை. எத்தனை நாளைக்கு ராஜியை ஏமாற்றுவது? கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் தலையணையை நனைக்கும் வரை அழுதுகொண்டிருந்தான். ''அங்கிள்'' என்றழைக்கும்குரல்கேட்டுத்திரும்பிப்பார்த்தான் டேவிட்.

''அங்கிள் நான் இனிமேல் அம்மா விட்ட போகப் போகிறேனென்று அழமாட்டேன். நீங்க அழாதீங்க அங்கிள்'' என்ருள் அழுதபடி.

அந்தப் பிஞ்சு மனம் இன்னும் மாலை நடந்த நிகழ்ச்சியையே நினைத்துக்கொண்டிருக்கிறது. எவ்வளவு மென்மையான இதயத்தைப் புண்படுத்தி விட்டோம் என்று வேதனையடைந்தான் டேவிட்.

''ராஜி, இன்னுமா நீதூங் கேல்லை?'' என்று கேட்டான் டேவிட்.

''தூக்கம் வரமாட்டேங்குது அங்கிள்'' என்றபடி கண்களை மூக் கொண்டாள் ராஜி.

''அங்கிள் உனக்கு அம்மாப் பொம்மை வாங்கித் தருவன் தாங்கம்மா'' - என்று கூறியபடி ராஜியின் முதுகை தட்டினுன் டேவிட் நிச்சயமா வாங்கித்தருவீர்களா அங்கிள்'' என்று சந்தேகத்துடன் கேட்டாள் ராஜி.

''ஓம்'' என்று டேவிட் கூறும்போது அவனையுமறியாமல் கண்களில் நீர் திரையிட்டது. ராஜியை ஒருவாறு தேற்றி அவளைத்தூங்க வைத்தான் டேவிட்.

மறுநாள் மேரியைப்பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தபோது எதிரேயிருந்த கடையில் இருந்த பொம்மை அவன் கவனத்தை ஈர்த்தது. ராஜியின் நினைவு வரவே அப் பொம்மையை வாங்கிக் கொண்டு வீடு திரும்பினுன் டேவிட்.

டேவிட் வீட்டிற்குள் நுழையும்போது அங்கு ராஜி படம் ஒன்று வரைந்து கொண்டிருந்தாள் மெல்ல அருகே சென்று பார்த்தான். ராஜி ஒரு தாயின் படம் ஒன்றை வரைந்து கொண்டிருந்தாள். டேவிட்டின் காலடியோசையை கேட்டதும்.

''குட் ஈவினிங் அங்கிள் எப்போ வந்தீங்க? ''இந்த அம்மாப் படம் நல்லாயிருக்கா அங்கிள்'' என்று கூறியபடியே அந்தப்படத்தை டேவிட்டிடம் காட்டினுள் ராஜி.

'தாயை நினைத்துத் தினமும் ஏங்கும் இந்தக் குழந்தைக்கு நான் பூச்சாண்டி காட்டுகிறேனு? குழந்தையைமட்டுமா நான் ஏமாற்றுகின்றேன் என்ற தன்னைத்தானேஏமாற்றுகின்ற எண்ணம்அவனைச்சித்திரவதை செய்தது. கையில் இருந்தபொட்டலம் கனத்தது. டேவிட்டின் கையில் இருந்த பார்சலை வாங்கிப்பிரித்தாள் ராஜி. பொம்மையைக் கண்டதும் ராஜி துள்ளிக் குதித்தாள். அந்த அம்மா பொம்மையை மாறி மாறி முத்தமிட்டாள். தன் கண்களில் வழியும் கண்ணீரை மறைக்க டேவிட் அப்பால் நகர்ந்தான்.

இப்போதெல்லாம் டேவிட்; மேரியை அடிக்கடி சென்று பார்ப்பான் பொலிவற்றுக் கிடக்கும் மேரியின் முகம் அவன் நினைவில் மாறி மாறி வந்துகொண்டிருக்கும். மேரிக்குமட்டும் சுயநினைவிருந்தால் 'ராஜி ரொம்ப வளர்ந்துட்டாளா? ஸ்கூலுக்குப் போருளா? என்னை மாதிரி இருக்கிருள்' என்று கேட்டிருப்பாள். மேரி என்றைக்காவது ஒருநாள் நல்ல நிலைக்கு வருவாள் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே டேவிட் காத்திருக்கின்ருன்.

மேரி அடிக்கடி வெளியில் செல்ல எத்தனிப்பதாகவும், பைத்தியம் பிடித்தவள் போல் கத்துவதாகவும், சில நேரங்களில் அவளைக் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதாகவும் மருத்துவ மனையில் இருந்து புகார்கள் வந்து கொண்டிருந்தன, டேவிட்டிற்கு. பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் அவளைச் சேர்க்க அவன் மனம் ஒப்

(9-ம் பக்கம் பார்க்க)

## கனைகடல் சூழ் நயினையிற் கற்பகதரு

இராகம்; தோடி
தாளம்; ஆதி

எடுப்பு

கனவிலும் நினைவிலுங் கருணை புரிந்தாதரி
கருணாகரி நயினை நாகாச்சி [கன]

தொடுப்பு

அனலிடைப்பட்ட மெழுகு போலடியேன்
அல்லற்படுவதைக் காணக்கண் கூசலையோ (கன)


முடிப்பு

உனைமறந்திடுவேனே உள்ளமுள்ளளவும்
தினையளவாகினும் திருநோக்கம் செய்யாயோ
கனைகடல்சூழ் நயினைற் கற்பக தருவுமாகிக்
காஞ்சியிலே அம்பா நீ காமாட்சியுமாய் [கன]

- நயினை நவம்

நயினை அம்பாள் உற்சவம் இன்று 6-ம் நாள்

# தொடர் நவீனம்




## 13

முற்றத்து மாமரத்துக்குக் கீழே நின்றவர்கள் வீட்டுவாசல் வரை வந்து அடக்க ஒடுக்கமாக நின்று கொண்டனர்.

திருச்சிற்றம்பலத்தார் வாசலை விட்டு இறங்கிக் கீழ்ப் படியில் நின்ற வண்ணம் ஒன்று மறியாதவர் போல அவர்களைப் பார்த்துக்கேட்டார்;

"என்ன மக்கள் வந்து நிக்கிறியள்?"

"ஐயா விட்டைத் தாறுக்கும்" என்றார் சின்னவிக்கிழவன்.

"என்ன காரியம்?"

"சுந்தரலிங்கம் ஐயா வந்து எங்கள் எல்லாரையும் குடியெழும்பச் சொல்லுறார்"

"ஓகோ...!"

"தான் அந்த நிலத்தை வாங்கிப்போட்டாராம்."

"அவன் என்னை விடமாட்டனெண்டு பிடிச்சுக்கொண்டான் மக்கள். கொழும்பிலையும் கண்டியிலையும் அவன் வச்சிருந்த கடையளைக் கலவரத்தோட எரிச்சுப் போட்டான்களாம். அவனும் பாவம்!"

"அதுக்காக ஐயா...!"

"இனிமேல் யாழ்ப்பாணத்துக்கு வெளியாலை போய்ப் பிழைக்கேலாது. தான் முந்திரியத்தோட்டம் செய்யப் போறனெண்டு நிண்டு கொண்டான்"

"நாங்கள்..." என்று எதையோ சொல்ல வாயெடுத்தான் கந்தசாமி. அதற்குள் அவர் இடைமறித்துச் சொன்னார்;

"உங்களை நிலைக்காம விடேலை. ஆனால் உங்கடை கையாலை நான் எப்படிக் காசு வேண்டுறது மக்கள்! நீங்கள் எங்கடை பிள்ளையள்."

"நாங்கள் ஐஞ்சாறு தலைமுறையாகக் குடியிருக்கிறம். எங்களை அதுக்குள்ளாலை இருந்து வெளிக்கிடச்சொன்னால் நாங்கள் எங்கை போறது?" என்றான் வேலாயுதம்.

"நான் சுந்தரலிங்கத்துக்குச் சொல்லுறன் அப்ப... நீங்க வாருங்கோ!" என்று சொல்லிக்கொண்டே அவர் உள்ளே திரும்பிவிட்டார்.

அவர்கள் எல்லோருக்கும் ஒன்று புரிந்தது. திருச்சிற்றம்பலத்தார் தந்திரமாக அந்த நிலத்தை விலைக்கு விற்றுப் பணத்தைச்சுருட்டிக் கொண்டு விட்டார் என்பது தான் அது. அவரோடு இனிமேல் பேசுவதில் அர்த்தமில்லை. தாங்கள் குடியிருக்கும் நிலத்தை விலைகொடுத்து வாங்கியிருக்கும் சுந்தரலிங்கமும் சும்மா இருந்து விடப்போவதில்லை. இதனாலே பெரும் குழப்பங்கள் தான் வரப்போகிறது என்பதைத் தீர்மானித்துக்கொண்டார்கள்.

திருச்சிற்றம்பலத்தார் வீட்டிலிருந்து அவர்கள் திரும்பும் போது மனத்திற் குழப்பமும் குமுறலுமே நிறைந்திருந்த போதிலும் உறுதியான ஒரு முடிவுடன் தான் வந்தார்கள்.

சுந்தரலிங்கம் எச்சரிக்கை செய்து சொல்லிப் போன ஒரு மாத காலக்கெடுவும் முடிந்து போனது.

அவர் எதிர்பார்த்தது போல அந்த நிலத்தில் குடியிருந்த ஒரு குடும்பத்தனும் அங்கிருந்து வெளியேறவில்லை.

அந்த நிலத்தை விட்டு அவர்கள் வெளியேறினால் சுதந்திரமாகக் காலூன்றி நிற்பதற்கும் அவர்களுக்கு இடமில்லை. தங்களுக்கென்று வேறு புகலிடமில்லாத அந்த ஏழை மக்கள் சுந்தரலிங்கத்தின் எச்சரிக்கைக்குப் பணிந்து வேறு எங்குதான் சென்று சரண் புக முடியும்?

சுந்தரலிங்கம் தன் கையாட்கள் மூலம் மீண்டும் மீண்டும் தகவல்களை அனுப்பி அவர்களை அச்சுறுத்திக் கொண்டிருந்தார்.

அவர்களுக்கும் தாங்கள் இப்போது செய்யத் தகுந்தது என்னவென்பது புரியாமல் தினமும் நெஞ்சம் கலங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் முதியவர்களாக இருந்தவர்களின் சிந்தனை, சுந்தரலிங்கத்தின் பாதங்களிற்போய் விழுந்தால் அவர் தங்களைக் கைவிடாது அபயமளித்துப் பாதுகாப்பாரென்றே நம்பிக்கை கொண்டிருந்தது. ஆனால் முதியவர்களின் அந்த மனப்போக்கை இளைஞர்கள் எல்லோரும் ஒருமனமாக எதிர்த்தார்கள்.

"பணம் கொடுத்து நிலத்தைக் கேட்டாலும் அவர் எங்களுக்குத் தரப் போவதில்லை. அப்பிடி அவர் கேட்டாலும் குடுக்கிறதுக்கும் எங்களிட்டை எதுவுமில்லை. வீணாக அவரிட்டை ஏன் போவான்!"

இளைஞர்கள் எடுத்தெடுத்துச் சொன்ன போதும், பெரியவர்கள் தங்கள் மனத்திற் கொண்ட நம்பிக்கை தளராமல் ஒருதினம் அவரைத் தேடிச் சென்றார்கள்.

அவர்கள், அவர் வீடுதேடிச் சென்ற சமயம் சுந்தரலிங்கம் தன் காரிலேறி வெளியே செல்வதற்கு வீட்டிலிருந்து புறப்பட்டு வந்து கொண்டிருந்தார்.

அவருடைய கார் 'கேற்'றைத் தாண்டி தெருவில் இறங்கி, வேகமாகத் திரும்பியது.

அப்போது 'கேற்'றுக்கு வெளியே தெருவில் நின்று கொண்டிருக்கும் அவர்களை அவர் கண்டு கொண்டார். உடனே காரை நிறுத்துமாறு சாரதிக்கு கட்டளையிட்டு நிறுத்தினார்.

காருக்குள்ளே அவர் அமர்ந்திருந்த வண்ணம் தலையை மட்டும் வெளியேநீட்டி, "ஏன் நிக்கிறியள்?" என்றார், பார்வையில் அலட்சியமும் குரலில் அதிகாரமும் தொனித்தது.

"ஐயா எங்களைக் கைவிடக் கூடாது" சின்னவிக் கிழவன் கூனிக் குறுகினான்.

"அதெல்லாம் சரிவராது போங்கோ;" -எடுத்தெறிந்து பேசினார் சுந்தரலிங்கம்.

"ஐயா, அப்படிச் சொல்லக் கூடாதாக்கும்" இன்னொரு கிழவன் பணிந்துகுழைந்தான்.

"ஓ... நாலைஞ்சு கணக்கிலை மண்ணுக்கை காசைக் கொட்டிப் போட்டு, கையைக் கட்டிக் கொண்டு பேசாமல் இருக்க வேணுமாக்கும்."

"நாங்கள் ஏழையள் எங்கை யாக்கும் போவம்."

"அதை என்னையே கேக்கிறாய்? எங்கையாவது கடல் கணத்துக்குப் போங்கோ..." -அவர் சீறினார்.

"ஐயா இப்படிச் சொன்னால் நாங்கள் என்னுக்கும், செய்வம்!.. ஐயா தான் ஏதும்..."

"சீச்சி... அதொண்டும் நடவாது, இப்ப நான் லோயரைத் தேடித் தான் போறன் கோட்டாலை கட்டளை வரும் அங்கை வந்து சொல்லுங்கோ!"

கார் தெருப்புழுதியை அவர்கள் மேல் அள்ளி இறைத்துக் கொண்டு வேகமாகக் கிளம்பிச் சென்றுவிட்டது.

அவர் சொல்லிக் கொண்டு போனது போல பத்துக் குடும்பங்களுக்கு இரண்டு வார காலத்துக்குள்ளே நீதி மன்றக் கட்டளைகள் வந்துவிட்டன.

சுந்தரலிங்கம் விசாரணைகள் துரிதமாக நடந்து முடிவதற்கான ஏற்பாடுகளையும் செய்து வைத்தார். காணித் தகராறுகள் நீதி மன்றத்துக்குச் சென்றுவிட்டால் பொதுவாக வருடக் கணக்கில் விசாரணைகள் நீண்டு செல்வதே வழக்கம். ஆனால் இந்த வழக்குகள் ஓராண்டு காலத்துக்குள்ளே விசாரணைகள் எல்லாம் முடிவுற்றுத் தீர்ப்பும் வழங்கப்பட்டுவிட்டது.

ஆறுமாத கால எல்லைக்குள் அந்தப் பத்துக் குடும்பங்களும் அவர்கள் குடியிருந்துகொண்டிருக்கும் நிலத்தை விட்டு வெளியேறி விடவேண்டுமென்பதே நீதி மன்றத்திலிருந்து பிறப்பிக்கப்பட்ட சட்டத்தின் தீர்ப்பு.

நீதிமன்றத்தின் தீர்ப்புத் தனக்குச் சாதகமாக அமைந்ததும், மறுநாளே எஞ்சிய பதினன்கு குடும்பங்களின் மீதும் அவர் உடனடியாக வழக்குத் தொடுத்தார்.

நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட ஆறுமாத காலக்கெடுவு இமைப்பொழுதாக விரைந்து கழிந்து போனது. ஆனால் அவர்கள் எவருமே தாங்கள் குடியிருக்கும் அந்த நிலங்களிலிருந்து வெளியேறவில்லை.

ஒரு தினம் நடுப்பகல்வேளை.

கூலி உழைப்பாளிகளான அந்தக்குடும்பங்களைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் அந்தப்பகுதித் தோட்டங்களை நோக்கி அன்றைய வயிற்றுப் பாட்டுக்கான உழைப்புக்காகப் போய்விட்ட நேரம். வயதேறித் தளர்ந்துபோனவர்களும், கூலிப்பிழைப்புக்குச்செல்லாத சில பெண்களும், புழுதி அளைந்து விளையாடும் சிறார்களுந்தான் அந்தக்குடிசைகளில் அப்போது தங்கி இருந்தனர்.

அதுதான் தகுந்த சமயம் என்று கண்டு நீதிமன்றக்கட்டளைச் சேவகனும், சுந்தரலிங்கத்தின் கையாட்களும் ஒன்று சேர்ந்து திடீரென்று அங்கே வந்து அகற்றப்படவேண்டிய குடிசைகளை உடைத்து விழுத்திப் பிடுங்கி எறிந்தார்கள்.

அந்தக் குடிசைகள் அனைத்தும் மிகநெருக்கமாகவும் புகையிலைப் புகையோடும் குடில்கள் போலச் சின்னச் சின்னக் கொட்டில்களாகவும் இருந்ததால் அவற்றை அழித்துச் சிதைப்பதில் அவர்களுக்கு அதிகநேரம் எடுக்கவில்லை.

அவர்கள் தங்கள் வெறியாட்டத்தை முதன்முதலில் ஆரம்பித்தது கந்தசாமியின் குடிசையில்தான். அதை அடுத்து வேலாயுதத்தின் குடிசை நிலத்திற் சரிந்து விழுந்தது. தொடர்ந்து பதினைந்து குடும்பங்களின் குடிசைகளை அழித்துவிட்டே அங்கிருந்துகிளம்பினார்கள் அவர்கள்.

தோட்டங்களில் வேலை செய்து கொண்டு நின்றவர்களுக்குத் தங்கள் குடிசைகள் அழிக்கப்படும் செய்தி எப்படியோபோய்ச்சேர்ந்து விட்டது. அவர்களும்அவர்களோடு சேர்ந்துவேலைசெய்யும்ஏனையகூலித் தொழிலாளர்களும் தாங்கள் செய்து கொண்டிருந்த வேலைகளை அப்படியே விட்டு வைத்து விட்டு உள்ளக் கொதிப்புடன் ஓடிவந்தார்கள்.

அவர்கள் அங்குவந்து சேர்ந்த சமயத்தில் சுந்தரலிங்கத்தின் ஏவற்கூலிகள் நின்றிருந்தால்...

அன்றிரவே அவர்களும் அந்தக்கிராமமெங்கும் பரந்து வாழ்ந்து கொண்டிருக்கும் கூலித்தொழிலாளர்களும் ஒன்று திரண்டு அழிக்கப்பட்ட குடிசைகளை மீண்டும் அதே இடங்களிற் போட்டு முடித்தார்கள்.

சுந்தரலிங்கம் அந்த அளவில் தமது நடவடிக்கைகள் எல்லாவற்றையும் கைவிட்டு அமைதியாக இருந்து விடப் போவதில்லையென்பது அவர்களுக்குத்தெரியும். பயங்கரமான ஒரு சோதனைக்கு முகம் கொடுக்கவேண்டியவொரு காலம் நெருங்கிக் கொண்டிருப்பதை அவர்கள் எதிர்பார்த்திருந்தார்கள்,

இதற்கிடையில் வயிரவக் கிழவன் ஒரு தினம் கந்தசாமியைத் தேடிக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தார். கந்தசாமி பலதடவைகள் அவரைக்கண்டு தங்கமணிக்கு ஒரு வரன் பார்க்குமாறுசொல்லிக்கொண்டிருந்தான், கந்தசாமியின் குடும்பநிலைக்குத் தகுந்ததாகத் தங்கமணிக்கு ஒரு வரன் தேடுவதில் அவருக்குப் பல சிரமங்கள் இருந்தன. இறுதியில் இமையாணனில் ஒரு மாப்பிள்ளை ஒழுங்கு செய்து கொண்டே அவர் அங்கு வந்தார்.

ஒருவார காலத்தில் மாப்பிள்ளையையும் அவன் உறவினர்களையும் தங்கமணியைப் பெண்பார்க்க அழைத்து வருவதாகக்கூறிக்கொண்டு அவர் புறப்பட்டுப் போய்விட்டார்.

வயிரவிக்கிழவன் வருவதாகச் சொல்லிக்கொண்டு போன தினத்துக்கு முதல் நாள் இரவு......

(வளரும்)

## ஏன் வீழ்ந்ததுவோ?

ஒற்றைப் பனையென்
வளவின் எல்லையில்—
வடக்கு எல்லையில்—
நிமிர்ந்து உயர்ந்து
வளர்ந்து நிற்குது!

சோழகம் வந்ததை
ஆட்டி அலைக்கும்!
வில்லைப் போலதை
வளைக்கும்! நெளிக்கும்!
வளைப்பதைப் பார்த்தால்
பயமாயிருக்கும்!;

காலை நேரம்!
முற்றத்தில் நின்றேன்!!
எல்லையில் நிற்கும்
பனையிலிருந்து
'சரசர'வென்ற
சத்தம் எழுந்தது!
நிமிர்ந்து பார்த்தேன்
பனையிலிருந்து
ஓலை ஒன்று
வீழ்ந்து மடிந்தது!


என் கண்ணெதிரில்
இது நடந்ததனால்
'ஏன் விழுந்தது?' என
விசாரணை செய்தேன்!
'வயது முதிர்ந்ததால்
காம்பிடி தளர்ந்ததால்
விழுந்தது' என்றார்
முதியவர் ஒருவர்!

"முதுமையின்
கொடுமையால்
மனமுடைந்ததனால்
வீழ்ந்தது' என்று
விளக்கினார் ஒருவர்!

'உச்சியில் உள்ள
இளசுகளினது
கேலிப் பேச்சுகள்
கிண்டல் கதைகளைத்
தாங்க முடியாது
வீழ்ந்து மடிந்தது' என
மற்றவர் சொன்னார்!

"முதியவர் ஒருவர்
தம்முடன் இருப்பதை
விரும்பாத இளசுகள்
திட்டமிட்டுச்
செய்தது இது" என
சொன்னவரேதான்—
"உச்சியிலிருந்தது
வீழ்ந்த போது
'கலகல'வென்று
இளசுகள் சிரித்தன!
அவற்றின் சிரிப்பில்
ஐயுறுகின்றேன்"
என்று முடித்தார்!
எதற்காய் வீழ்ந்தது?
அதற்கே தெரியும்!
நில்லா இளமையை
நில்லா வாழ்க்கையை
மெல்ல வீழ்ந்தது
சொல்லுகின்றதோ?

—"முருகு"




# டொஜருக்கு ஜெயில் தண்டனை

ரேஸும் அவள் மாமியும் லண்டன் நகரில் மூன்று தினங்களுக்கு மட்டுமே தங்குவதாக வந்திருந்தனர். ஒலிவரின் வாழ்வில் மறைந்துள்ள மர்மத்தை அறிந்துவிடவேண்டும் என ரேஸின் மனம் துடித்தது. அதேசமயம் நான்ஸிக்கு கொடுத்த வாக்குறுதியின் படி இரகசியத்தை வெளியிடாமல் இருக்கவேண்டிய கட்டாயமும் இருந்தது.

இவ்வாறு அவள் யோசித்துக்கொண்டிருந்த வேளையில் ஒலிவர் அந்த அறைக்குள் பரபரப்புடன் ஓடிவந்து தன்னைக்காப்பாற்றிய அந்தக்கனவான் ஒரு வண்டியிலிருந்து இறங்குவதைத்தான் கண்டதாகவும் அவரைத்தான்போய் பார்க்கவேண்டும் என்றும் சொன்னான். ஒரு துண்டுப் பேப்பரைத்தன் பாக்கட்டிலிருந்து எடுத்து இதுதான் அவருடைய விலாசம் என்றும் காட்டினான்.


இதைக் கண்டதும் ரேஸ் உடனடியாகவே தனது மாமியிடம் சொல்லிக்கொண்டு ஒலிவருடன் ஒரு வண்டியில் புறப்பட்டு அந்த விலாசத்துக்கு சென்றாள். அச்சமயம் திரு. பிரவுன்லோ வீட்டில் இருந்தமையால் ஒலிவரை கீழேயே இருக்கும்படி சொல்லிவிட்டு மேல் மாடிக்குச் சென்று அவரைச் சந்தித்தாள். அங்கே அவரது நண்பர் கிறிம்விக்கும் அமர்ந்திருந்தார்.

ஒலிவர் ருவிஸ்ற் என்ற ஒரு பையனுக்கு ஒரு முறை திரு. பிரவுன்லோகாட்டிய கருணையைப்பற்றி ரேஸ்எடுத்துக்கூற ஆரம்பித்தவுடனேயே அதனை உடன் நிறுத்தினர். "அந்தப் பையனுக்கு நான் காட்டிய கருணையைப்பற்றி இப்போது ஒன்றுமே பேசவேண்டாம், பெண்ணே அவனைப்பற்றி எனக்கு ஏற்பட்டுள்ள அபிப்பிராயத்தை மாற்ற முடியுமானால் மட்டும் ஏதும் சொல்" என்றார் பிரவுன்லோ.

"அவன் ஒரு உயர்ந்த குணம் படைத்த சிறுவன். அவனைவிட ஆறுமடங்கு வயதுடையவர்களுக்குரிய உணர்வுகள் அவனுக்குண்டு. மனதாலும் பண்பாலும் அவன் உயர்ந்தவன்", அதன்பின் பிரவுன்லோவின் வீட்டிருந்து போனதிலிருந்து ஒலிவருக்கு நடந்ததையெல்லாம் ரேஸ் விபரமாக அவரிடம் எடுத்துக் கூறினாள். பிரவுன்லோமிகவும் மகிழ்ச்சியடைந்தவராய் ஒலிவரைச் சந்திக்க பெரிதும் விரும்பினார் ஒலிவர் கீழே வண்டியில் காத்திருப்பதையறிந்து தாமே நேரில் விரைந்து சென்று அவனை அழைத்துவந்தார். பிறகு தன் இல்லப்பராமரிப்பாளர் திருமதி பெட்வினை அழைத்தார். அந்த முதிய மாது அருகில் வந்து பேசாமல் நிற்கவே "என்ன பெட்வின் உனக்கு வரவர கண்பார்வை மோசம் போலிருக்கிறது. கண்ணாடியை எடுத்துப்போட்டுக் கொண்டு பாரேன்" என்றார் பிரவுன்லோ. திருமதி பெட்வின் கண்ணாடியைத் தேடிப்போடும் வரைகாத்திருக்காமல் ஒலிவர் அவர் மீது பாய்ந்துகட்டிப்பிடித்துக்கொண்டான்.

"கடவுளே என்னுடைய அந்த அப்பாவிச் சிறுவன்!" என்று ஆச்சரியத்தை வெளியிட்டாள் பெட்வின் "எனக்குத் தெரியும் அவன் திரும்பி வருவான் என்று", எனக் கூறிய அம் முதிய பெண்மணி ஒலிவரை வைத்து அன்பு பாராட்டலானாள். அதற்குள் திரு பிரவுன்லோ ரேஸை அழைத்துக் கொண்டு இன்னொரு அறைக்குள் சென்று ஒலிவர் பற்றி அவள் கூறிய அனைத்தையும் கேட்டறிந்தார். அதன் பின் ரேஸும் ஒலிவரும் பழைய இடத்துக் திரும்பினார்கள்.

இதே சமயம் பேஜினின்பிரதம சீடர்களில் ஒருவனான ஆட்புள் டொஜர் ஜேப்படி செய்யும்போது பொலிசாரால் பிடிபட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டான்.



இது பேஜினுக்கு மிகுந்த கவலையைக் கொடுத்திருந்தது அவன் தன்னைப்பற்றி ஏதும் நீதி மன்றத்தில் உளறிவிடுவானோவென்று பயந்தான் நீதி மன்றத்தில் நடப்பவைகளை அறிந்து வந்து சொல்வதற்காக ஒருவரை அனுப்பி வைத்தான்.

டொஜர் நீதி மன்றத்துக்குள் கொண்டுவரப்பட்டான். வழமை போல கோட் பாக்கெட்டுக்குள் ஒரு கையையும் மறு கையில் தொப்பியுமாக அவன் காணப்பட்டான். கூண்டுக்குள் ஏறியவுடனே, "இப்படியாக நான் ஏன் அவமதிப்புக்குள்ளாக்கப்படுகிறேன்" என்று கேட்டான்.

"வாயை மூடிக்கொள்" என்று அச்சுறுத்தினான் கான்ஸ்டபிள்.

"நான் ஆங்கிலேயன் இல்லையா? எனது உரிமைகள் எங்கே! என்று கேட்டான் டொஜர்

கொஞ்சம் பொறுத்துக்கொள் உன் உரிமைகளோடு சாப்பாடும் கிடைக்கும்" என்றான் ஜெய்லர்.

அப்போ இதுபற்றிராஜாங்க அமைச்சர் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம் இப்போ இந்த நீதிபதிகள் என்னை வெகு நேரம் காக்க வைக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். நகரில் ஒரு கனவானுடன் எனக்கு அலுவல் இருக்கிறது. நான் நேரம் தப்பாத மனிதன் நான் போகாவிட்டால் அவர் போய்விடுவார். என்னை இங்கே காக்க வைப்பவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்ய வேண்டி ஏற்படும்" என்றான் டொஜர் - பார்வையாளர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"அமைதியாய் இருங்கள்" என்றான் ஜெய்லர்.

"என்ன விஷயம்" என்று நீதிபதிகளில் ஒருவர் கேட்டார்.

"ஜேப்படி வழக்கு ஐயா" என்றான் ஜெய்லர். பொலிஸ்காரன் ஒருவன் முன் வந்து டொஜர் திருடியது தொடர்பாக சாட்சியமளித்தான்.

"சாட்சியிடம் ஏதும் கேட்கப்போகிறாயா" என்று நீதவான் கேட்டார்.

"இங்கே இல்லை. இது நீதி வழங்கும் இடமும் இல்லை. மேலும் எனது வழக்கறிஞர் கொமன் சபையின் உதவித் தலைவருடன் காலை உணவு அருந்திக் கொண்டிருக்கிறார். இருந்தாலும், வேறு ஒருஇடத்தில் சில விஷயங்களை நான் சொல்லத்தான் வேண்டும்" என்றான்.

"அவனைக் கொண்டு போங்கள்" என்று உத்தரவிட்டார்; நீதவான்.

"வாவா" என்று அழைத்தான் ஜெயிலர்.

'நான் வருகிறேன்' என்று கூறியபடி தொப்பியைத் துடைத்துக்கொண்ட டொஜர் மாஜிஸ்ரேட் பக்கமாகத் திரும்பி "நீங்கள் பயப்படத் தேவையில்லை பயல்களே! உங்களுக்கெல்லாம் நான் கருணையே காட்டப்போவதில்லை. நீங்கள் முழங்காலில் விழுந்து கெஞ்சினாலும் நான் விடுதலையாகிப் போகமாட்டேன் என்னை ஜெயிலுக்கு கொண்டுபோங்கள்!' இவ்வாறு கூறியபடி ஜெயிலரின் இறுக்கமான பிடிக்குள் சிக்கிய டொஜர் சிறைக்குச் சென்றான்.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த பேஜினின் ஆள் விபரம் தெரிவிப்பதற்காகப் பேஜினிடம் புறப்பட்டுச்சென்றான்.

[தொடரும்]

## ஒலிவர்ருவிஸ்ற் முன்கதைச் சுருக்கம்

அநாதரவாக வந்து சேரும் ஓர் இளமங்கை தொழிற் கூடமொன்றில் ஓர் ஆண் குழந்தையைப் பிரசவித்துவிட்டு இறந்து போகிறாள். இறக்கும்போது அவள் விடுத்துச் செல்லும் தன்னைப்பற்றிய சில இரகசியங்களைவிடுதித் தாதி தன்வசம் வைத்துக் கொள்கிறாள். அவ்வாறு பிறந்த ஒலிவர் ருவிஸ்ற் அநாதையாகத் தொழிற் கூடத்திலுள்ள ஏனையசிறுவர்களுடன் வளர்கிறான், உணவு போதாது என்று கேட்டமைக்காகத் தண்டிக்கப்படும் அச் சிறுவன் ஒருதினம் ஓடிப்போய்விடுகிறான். வழியில் டொஜர் என்ற பையனைச் சந்தித்து அவன் மூலம் பேஜின் என்ற யூதனிடம் செல்கிறான். சிறுவர்களைத் திருட்டுத் தொழிலில் ஈடுபடுத்துபவனான யூதன் ஒலிவரையும் அத்தொழில்செய்யப் பயிற்றுவிக்க முயல்கிறான்,

ஒருதினம் யூதனின் வற்புறுத்தலின் பேரில் அவனது உதவியாளர்"களுடன் ஒலிவர் வெளியில் செல்கிறான். அங்கே முதியவர் ஒருவரிடம் பேஜினின் திருடர்கள் 'பிக்பாக்கட்' அடிக்க முயன்றபோது ஒலிவர் தவறாகக் கைது செய்யப்படுகிறான். அதனால் அப்பெரியவரின் அனுதாபம் அவனுக்கு கிடைக்கின்றது. பிரவுன்லோ என்ற அந்த முதியவர் அவனை அழைத்துச்சென்று வைத்திருக்கிறார். ஒரு தினம் முதியவருக்காக வெளியில்செல்லும்போது மீண்டும் பேஜினின் ஆட்கள் அவனைப் பிடித்துச் சென்றுவிடுகிறார்கள்;

ஒருவீட்டில் திருடுவதற்காக பேஜினின் ஆட்கள் ஒலிவரைப் பயன்படுத்த முனைகிறார்கள். துப்பாக்கி வைத்துக்கொண்டு ஒலிவருக்கு அந்த வீட்டின் சொந்தக்காரியான முதிய மாதின் மருமகள் ரேஸ் என்பவளின் ஆதரவு கிடைக்கிறது ஒலிவருக்கு. அவள்மூலம் மீண்டும் முதியவர் பிரவுன்லோவைச் சந்திக்கிறான் ஒலிவர்.

இதற்கிடையில் ஒலிவரின் உறவினனான மங்கஸ் என்பவன் அந்தப் பழைய தாதியிடமிருந்த ஒலிவர் பற்றிய இரகசியங்களைத் தந்திரமாகப்பெற்று ஆற்றுக்குள் போட்டு விடுகின்றான்.

# வன்னிநாட்டில் சைவசமயத்திற்குப் புத்துயிர் அளித்தது உருத்திரபுரம் சிவாலயம்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

உருத்திரபுரம் சிவாலயத் திருப்பணி வேலை நடந்து கொண்டிருக்கும் பொழுது, பலபெரியார்கள் அவ்விடத்தைத் தரிசித்துள்ளார்கள். அவர்களுள் குன்றக்குடி அடிகளாரை விசேடமாகக் குறிப்பிட வேண்டும். அடிகளார் அங்கு கூறியவற்றை இங்கு குறிப்பிடுவது பொருத்மாகும். அடிகளாரின் மனத்தை அக்கோயிலின் அமைதியான சூழல் கவர்ந்து கொண்டது. அந்த அமைதியான சூழல் நீடித்திருக்க வேண்டுமாயின் குடிமனைகள் கோயிலுக்கு அருகாமையில் வராது பார்க்கும்படி கேட்டுக் கொண்டார்.

கோயில் திருப்பணிவேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொழுதே அம்பாள், பிள்ளையார் திருவுருவங்களைச் செய்வதற்கு மதுரையில் ஏற்பாடு செய்யப்பட்டது. திருவுருவங்கள் உரியகாலத்திற் செய்யப்பட்ட போதிலும், இலங்கை வந்துசேர்வதற்குத் தாமதம் ஏற்பட்டது. இத் திருவுருங்கள் தமிழரின் சிற்பத்திறனுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

திருவுருவங்கள் இலங்கை வந்து சேர்ந்ததும், கும்பாபிஷேகத்துக்கு நாள் வைக்கப் பட்டு. அதற்குவேண்டிய ஏற்பாடுகளும் துரிதமாகச் செய்யப்பட்டன 27 - 8 - 58-ல் திருவுருவங்கள் பிரதிஷ்டை

ச. அம்பிகைபாகன்

செய்யப்பெற்று, கும்பாபிஷேகமும் நடைபெற்றது. கும்பாபிஷேக வைபவத்துக்குப் பல பாகங்களிலுமிருநது மக்கள் திரளாகக்கூடினர். அன்று நடந்த கூட்டத்துக்கு திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபைத் தலைவர் சேர் கந்தையா வைத்தியநாதன் தலைமை வகித்தார். திரு ம ஸ்ரீகாந்தா. முதலியார் இ. முத்துத்தம்பி முதலியோர் சொற்பொழிவாற்றினர். சேர் கந்தையா வைத்தியநாதன் தமது தலைமையுரையில் புது ஆலயங்களைக் கட்டுவதிலும் சிலமடைந்திருக்கும் ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்வதே பெரும்புண்ணியமென்று கூறினார். திரு. ஸ்ரீகாந்தா சிவன், அம்பாள், பிள்ளையார் கோயில்களை முறையே கட்டுவித்த திரு. ஆர். செல்லையா, சிறுப்பர் சு கனககசபை, திரு. க. சதாசிவம் முதலியோர்களைப் பாராட்டிப் பேசினார். முதலியார் முத்துத்தம்பி தமிழரின் எதிர்கால வாழ்வுக்கு உருத்திரபுரச் சிவாலயம் கேந்திரஸ்தானமாக அமையப் போவதை எடுத்துக் காட்டினார்.

இக்கோயிலுக்கு அரசாங்கத்தார் பத்து ஏக்கர் நிலம் கொடுத்துள்ளார்கள். இந் நிலம் இப்பொழுது துப்புரவு செய்யப்பெற்றிருக்கிறது. இன்னும் திருப்பணி வேலைகள் பல செய்யப்பட வேண்டும், இவையெல்லாம் இனிது நிறைவேற உருத்திரபுரீஸ்வரி சமேத உருத்திரபுரீஸ்வரர் அருள்புரிவாராக.

## அந்தச்... சின்னக்குழந்தை

சின்னக்குழந்தை
சிரித்திடும் அழகைச்
சொல்ல மொழியும்
முண்டோ?
என்ன நினைத்தது
எப்படி அழுதது
நினைத்திட மொழியு
முண்டோ?
வண்ணப் பட்டுடை
எண்ணப் பசுங்கொடி
என்னினிய மகளே?
உன்னைக் கொன்றிட
எண்ணங் கொண்டவன்
என்ன பிறவியாமோ?
தின்னும் பேய்தனும்
உன்னைக் கண்டிடில
தின்பண்டம்கொண்டுதரும்
பண்பு கெட்டவன்
என்ன நினைத்தனன்
உன்னையுமா கொன்றான்!!
சின்னப் பரிகளைப்
போலவே வருகையில்
என்ன சொல்லிச் சிரித்தாய்?
சீண்டிட வந்த
தீமைக் கண்ட
போதிலுமா சிரித்தாய்?
பாய் மரமில்லாப்
படகினிலே நீ
எவ்வழி போனாயோ?
காய் மரமெல்லாம்
கொய்தவன் உன்னைப்
பிஞ்சினிற் கொன்றானே!
கீழ் மகனுன்னைக்
கால்களிலிட்டுக்
கீறியிருந்தாலும்!
தாயெவள் பெற்றாள்
தீயவனுய காதகனை ஐயோ!

— குமார் ஜோதிபாலா

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## நினைவில் நிறைந்த அரசியலார்சிலர்—13

# சிறிமா அரசுக்கு தந்தை செல்வா விடுத்த சவால்!

1960-ஆம் ஆண்டு மார்ச் மாதம் நான்காவது பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் டட்லி தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும்மைத்திரி, சி பி டி சில்வா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் மிகக் குறைந்த பெரும்பான்மைப்பலத்துடன் தெரிவு செய்யப்பட்டன.

தமிழரசுக் கட்சியின் ஆதரவில்லாமல் எந்தக் கட்சியும் அரசு அமைக்க முடியாத நிலை தமிழரசுக் கட்சியுடன் பேரம் பேசப்பட்டது டட்லி தலைமையிலான ஐக்கியதேசியக் கட்சி ஆட்சி அமைப்பதற்குத்தந்தை செல்வா ஆதரவு வழங்குவதற்குத் தீர்மானித்தார்.

பேரம் பேசியபோது ஒப்புக்கொண்டபடி பிரதமர் டட்லி உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லையென்பதால் தமது ஆதரவை விலக்கிக் கொள்ளத் தீர்மானித்த தந்தை செல்வா டட்லிஅரசைச்சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களித்துக்கவிழச் செய்தார்.

ஐந்தாவது பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் 1960-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நடைபெற்றது. திருமதி சிறிமா பண்டாரநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தலைமை தாங்கினார். செல்வநாயகம் பேரம் பேசுவதுபற்றி ஐக்கிய தேசியக்கட்சியும் சுதந்திரக் கட்சியும் பிரசாரம் செய்தது மட்டுமல்ல தமிழருக்கு அதிக சலுகைகளும் உரிமைகளும் வழங்குவதாக இருகட்சிகளும் ஒன்றையொன்று குற்றஞ்சாட்டிக் கொண்டன. திருமதி சிறிமா தலைமையிலான சுதந்திரக்கட்சி பெரும்பான்மைப் பலத்துடன்தேர்தலில் வெற்றியீட்டியது.

மீண்டும் தந்தை செல்வா தலைமையிலான தமிழ் அரசுக் கட்சி தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்கான போராட்டம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியது.

1961-ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் தந்தை செல்வா தலைமையில் யாழ்ப்பாணம் கச்சேரி முன் தமிழரசுக்கட்சி மறியல் போராட்டம்தொடங்கிச் சத்தியாக்கிரகப் போராட்டமாகத் தமிழ்ப் பகுதிகளில் பரவி பின்னர் அது சட்டமறுப்பு இயக்கமாக உருவெடுத்தது.

1959-ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பிரதமர் திரு. எஸ் டபிள்யூ ஆர் டி பண்டாரநாயக்கா கொலைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து காபாந்து பிரதமராக நியமிக்கப்பட்ட திரு டபிள்யு தகநாயகா 1960-ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொதுத் தேர்தலை நடத்தினார். இத்தேர்தலில் மைத்ரிபால சேனநாயகா சி.பி.டி சில்வா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், டட்லி சேனநாயகா தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியும் தகநாயகா தலைமையில் புதிதாக அமைக்கப்பட்ட லங்கா பிரஜா சுதந்திரக் கட்சியும் பிலிப் குணவர்த்தனவின் எம்ஈபியும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பெரும்பான்மையான தொகுதிகளில் போட்டியிட்டன வடக்கிலும் கிழக்கிலும் எஸ் ஜே. வி. செல்வநாயகம் தலைமையிலான இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியும் ஜி ஜி தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் போட்டியிட்டன. ஒரு தொகுதியில் தமிழ்க் காங்கிரசும் இதர தொகுதிகளில் தமிழ் அரசுக்கட்சியும் வெற்றி பெற்றன ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கூடிய தொகுதிகளில் வெற்றியீட்டிய போதிலும் ஆட்சி அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மைப்பலம் எந்தக் கட்சிக்கும் கிடைக்கவில்லை.

இந் நிலையில் தந்தை செல்வாவின் தலைமையிலான தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவை இரண்டு கட்சிகளும் நாடின மிகக் குறுகிய நேரத்துக்குள் பேரம் பேசப்பட்டது!

தமிழரசுக் கட்சியின் ஆதரவு டட்லியின் தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சிக்கு வழங்கப் பட்டதைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தது பாராளுமன்றம் கூடி சம்பிரதாயப்படி சிம்மாசனப் பிரசங்கமும் நிகழ்த்தப் பட்டது அரசுக்கு ஆதரவளிப்பதற்குத் தந்தை செல்வாவும் தமிழரசாரும் ஒப்புக்கொள்வதற்குக் காரணமாக இருந்த எதுவும் சிம்மாசனப்பிரசங்கத்தில் இடம்பெறவில்லை. பேரம் பேசியபோது ஒப்புக்கொள்ளப் பட்ட எதையும் செயல்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் தாங்கள் அரசுக்குக் கொடுத்த ஆதரவை விலக்கிக் கொள்வதாக தந்தை செல்வா பிரதமர் டட்லிக்கு அறிவித்தார். சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது தமிழரசார் எதிர்த்து வாக்களித்தனர். அரசுகவிழ்ந்தது!

சுதந்திரக் கட்சியை ஆட்சி அமைக்கும்படி கவர்னர் ஜெனரல் கேட்பாரென்று தமிழரசார் நினைத்தனர். ஆனால் பாராளுமன்றத்தைக் கலைத்து மீண்டும் ஒரு பொதுத் தேர்தலை நடத்துமாறு பிரதமர் டட்லிசேனநாயகா கவர்னர் ஜெனரலுக்குச் சிபாரிசு செய்தார்.

பாராளுமன்றம் கலைக்கப் பட்டது. ஜூலை மாதத்தில் பொதுத் தேர்தலுக்குத் தேதியும் அறிவிக்கப்பட்டது.

தேர்தல், நடைபெறுவதற்கு முன்னர் தந்தை செல்வா ஓர் அறிக்கையை ஈழத் தமிழ் பேசும் மக்களுக்கு விடுத்திருந்தார். பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த எந்த அரசியல் கட்சியும் ஆட்சி அமைக்கக்கூடிய அறுதிப்பெரும்பான்மைப்பலம் பெறக்கூடியதாகத் தமிழ் பேசும் மக்கள் தங்கள் வாக்குகளை அளிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அந்த அறிக்கையில் கேட்டிருந்தார்.

இந்தக் கோரிக்கையும் மார்ச் மாதத் தேர்தலில் அரசியலில் இறங்காமல் ஒதுங்கியிருந்த திருமதி சிறிமா பண்டாரநாயகா சுதந்திரக் கட்சிக்குத் தலைமை தாங்கித் தீவிர பிரசாரத்திலிறங்கியதும் ஜூலைப் பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சி ஆட்சி அமைப்பதற்கு அறுதிப் பெரும்பான்மைப்பலத்தைப் பெற்றுக் கொடுத்தது.

இதனால் தமிழரசுக் கட்சியின் ஆதரவு தேவைப்படவில்லை, பேரம் பேசவேண்டிய அவசியமுமில்லாமல் போய் விட்டது

ஆனாலும் தேர்தலுக்கு முன் தமிழரசாருக்கும் சுதந்திரக் கட்சியினருக்குமிடையில் நடைபெற்ற இரகசியப் பேச்சுக்களில் மாவட்ட சபைகள் அமைப்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது.

**எஸ். எம். ஜி.**

ஆட்சிபீடத்திலமர்ந்த பின்பு தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகள் பற்றி திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் அரசாங்கம் எதுவித அக்கறையும் எடுக்கவில்லை இதேசமயம் கல்வி நிறுவனங்களை அரசு எடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகள் பற்றி எதுவித பேச்சுவார்த்தைக்கும் முயற்சி செய்யப்படவில்லை இந் நிலையில் கல்வி அமைச்சரும், வர்த்தக அமைச்சரும் 1960-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்றார்கள்; மேலும் சில அமைச்சர்களும் வந்து திரும்பினர்! இச்சமயத்தில் நீதிமன்ற மொழி மசோதாவும் பாராளுமன்றத்தில் கொண்டுவரப் பட்டது. பின் அது நிறைவேறியது.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கும் தங்கள் குறைகளை உலகறியச் செய்வதற்கும் தந்தை செல்வாவும் தமிழரசாரும் புதிய இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்தனர். இதன்படி 1961-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ஆம் தேதி - காந்தி மகான் நினைவு நாளில் தந்தை செல்வாவும் மற்றும் கட்சிப் பிரமுகர்களும் யாழ்ப்பாணம் கச்சேரிக்கும் மற்றும் அரசாங்க இலாகாக்களுக்கும் சென்று தாம் எடுக்கவிருக்கும் நடவடிக்கை பற்றியும் அதற்கான காரணம் பற்றியும் விளக்கும் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர்.

1961ம் ஆண்டுபெப்ரவரி மாதம் யாழ்ப்பாணக் கச்சேரி வாசலில் தந்தை செல்வா தலைமையில் மறியல் போராட்டம் ஆரம்பமானது இரண்டு மாத காலம் இந்தமறியல் போராட்டம் யாழ்ப்பாணக் கச்சேரி முன்னும் மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள அரச அலுவலங்களிலும் பரவி வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருமலை முதலிய வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள அரச அலுவலகங்கள் முன்பாகப் பெரும் சத்தியாக்கிரக இயக்கமாக விஸ்தரித்து சட்டமறுப்பு இயக்கமாகவும் உருவெடுத்தது.

## சட்டமறுப்பும் ஹர்த்தாலும்

1956-ம் ஆண்டில் கடையடைப்புகடைதிறப்பு போராட்டத்தின்போது இந்தியவிடுதலை போராட்டத்தைப் போன்று இங்கும் சட்டமறுப்பு. ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டால் என்று குரல் எழுந்தபோது சட்டமறுப்பு, ஒத்துழையாமைக்கு இப்போது நேரம் சரியல்லவென்று கூறிய திரு செல்வநாயகம் இப்போது நாம் ஹர்த்தால், பகிஷ்கரிப்பு என்பவற்றையே நடத்திப் போராட்டத்துக்கு தயாராகிறோம் என விளக்கம் கொடுத்திருந்தார்.

கச்சேரி மறியல் சத்தியாக்கிரகம் தபால் தலைவெளியிடும் அளவுக்குச் சட்டமறுப்பு இயக்கமாக மாறிவிட்டது. வெளிநாடு சென்றிருந்த பிரதமர் திருமதி சிறிமா நாடு திரும்பியதும் சத்தியாக்கிரக இயக்கத்தை நிறுத்தும்படியும் இல்லையேல் விளைவுகளுக்கு தமிழரசுக்கட்சியே பொறுப்பேற்க வேண்டி வரும் என்றும் ஒரு கடுமையான அறிக்கையை வெளியிட்டார்.

## சிறிமாவுக்கு செல்வா பதில்

இதற்குப் பதிலளித்து தந்தைசெல்வா விடுத்த அறிக்கையில் ''1959-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25-ஆந் தேதி துப்பாக்கியேந்திய ஒரு கொலைகாரனின் முன்னால் தங்கள் கணவர் என்ன நிலையிலிருந்தாரோ அதே நிலையில்தான் நீங்கள் உங்கள் படைகளை எங்கள் மீது 'ஏவி'விடும் போது நாங்களும் இருப்போம் என்பதை நாங்களுணர்ந்துள்ளோம்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

1961-ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆந் தேதி அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டு அரசாங்க அலுவலகங்கள் முன் அமைதியாகச் சத்தியாக்கிரகம் செய்துகொண்டிருந்த ஆண்களும் பெண்களும் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டுச் சத்தியாக்கிரகம் கலைக்கப்பட்டது தலைவர்கள் கைது செய்யப்பட்டனர், தந்தை செல்வாவும் கைது செய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

தடுப்புக்காவலில்இருந்ததிரு. செல்வநாயகம்அவசர சத்திரசிகிச்சைக்காகலண்டன் செல்ல அனுமதிக்கப்பட்டார் சிகிச்சையின் பின் அவர் நாடு திரும்பியதும் அவரும் மற்றும் தலைவர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

1964-ஆம் ஆண்டில் திருமதி சிறிமா பண்டாரநாயாகாவின் அரசாங்கம் பத்திரிகை மசோதா வொன்றைக் கொண்டு வர எத்தனித்தது. லங்கா சமசமாஜக் கட்சியும் அரசுடன் ஒத்துழைக்க முன்வந்து டாக்டர் என். எம். மும் மற்றுமிருவரும் அமைச்சரானார்கள். இது ஆளும் கட்சிக்குள் பிரச்னையைக்கிளப்பியது. இச்சமயத்தில் ஜனநாயகத்தை காப்பாற்ற ''சி. பி. டி சில்வாவும் மற்றும் சிலரும் சுதந்திரக்கட்சியிலிருந்து வெளியேறினர். பாராளுமன்றத்தின் புதியகூட்டத்தொடரை ஆரம்பித்து கவர்னர் ஜெனரல் நிகழ்த்திய சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான வாக்கெடுப்பு 1964 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மூன்றும் தேதி நடைபெற்றபோது தந்தை செல்வாவும் தமிழரசாரும் காத்திருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினர்; சிறிமா அரசு கவிழ்ந்தது!

1965-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆறுவது பாராளுமன்றத்துக்கு நடைபெற்றபொதுத் தேர்தலில் டட்லி தலைமையிலான ஐக்கியதேசியக்கட்சிக்கு 66 ஸ்தானங்களும் சுதந்திரக்கட்சிக்கு 41 ஸ்தானங்களும் கிடைத்தன தேர்தல் முடிவுகள் 1956-மார்ச் 23ல் முழுமையாக வெளிவந்த பின்னரும் திருமதி பண்டாரநாயக்கா ராஜினாமாச் செய்யவில்லை ராஜினாமாச் செய்யக் கூடாதென்று ஆர்ப்பாட்டமும் நிகழ்ந்தது இச்சமயத்தில் பதினான்கு ஆசனங்களைப் பெற்று மூன்றாவது பெரிய கட்சியாக விளங்கிய தமிழரசுக்கட்சியின் ஆதரவைப் பெறுவதற்கு சுதந்திர-சமசமாஜ-கம்யூனிஸ்ட் கூட்டணியினர் முயற்சி செய்தனர். இந்த சமயம் இந்தமுயற்சியை முறியடித்து தமிழரசாரின் ஆதரவுதங்களுக்கேஎன்று திரு செல்வநாயகம் கையொப்பம் இட்ட கடிதத்தை திரு. வி. ஏ. சுகததாசா கவர்னர் ஜெனரலிடம் சமர்ப்பித்தார். சில நாட்கள் தாமதித்தபின் சிறிமா அரசு ராஜினாமாச்செய்தது.

## டட்லி–செல்வா ஒப்பந்தம்

திரு. டட்லி சேனநாயக்காவுடன் நடைபெற்ற இரகசியப் பேச்சுவார்த்தைகளின் இறுதியில் ஓர் ஒப்பந்தம் கைச்சாத்தானது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழரசார் டட்லி அரசுடன் சேர்ந்து ஒத்துழைத்தனர்

தமிழ்மக்களின்உரிமைகளைப் பெறுவதற்கு மாவட்டசபைகள் பூரண அதிகாரங்களுடன் அமைக்கப்படுவதற்கு உறுதியளிக்கப்பட்டிருந்தது.

மூன்றரை ஆண்டுகள் டட்லியின் ''தேசிய அரசில்'' தமிழரசு சேர்ந்து ஒத்துழைப்பு வழங்கியும் இறுதியில்மாவட்ட சபை மசோதா உருவாகாமல் வெள்ளை அறிக்கை மட்டுமே பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது.

இச்சமயத்தில் தமிழரசுக் கட்சியின் மூளை என வர்ணிக்கப்பட்ட திரு வி நவரத்தினம் அடையாள அட்டை, மாவட்டசபை அதிகாரங்கள் பற்றிய விஷயங்களில் கருத்து வேறுபாடு கொண்டு கட்சியிலிருந்து வெளியேறினார். மாவட்டசபை மூலம் தமிழரசுக்கட்சி இதுவரை பின்பற்றி வந்த மொழிக் கொள்கையைக் கைவிட்டுவிட்டதென்றும் சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக்கொண்டு விட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்

தந்தைசெல்வாவும் வெள்ளை அறிக்கை பற்றிப் பின்வரும் அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

''தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் மசோதாவில் நாம் எதிர்பார்த்த அளவு அதிகாரங்கள் அளிக்கப்படவில்லை என்பதையும் சில விதிகள் நாம் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்பதையும் நான் மறுக்கவில்லை''

இதன்பின் மூன்றரைஆண்டு கால உறவு முறிந்து தமிழரசார் தமது ஒத்துழைப்பையும் ஆதரவையும் விலக்கிக்கொண்டனர்!

(10-ம் பக்கம் பார்க்க)

## இரட்டைப் பரிசு

உலகப் புகழ் பெற்ற நாகரிகங்கள் பெரும்பாலும் ஆற்றங்கரைகளிலேயே வளர்ந்தவை தமிழர் வாழ்வில் குளம் தொட்டு வளம்பெருக்கிய நாகரிகம்வரலாற்றுப்புகழ் பெற்றது. கீழ் நோக்கிய கிணறும் மேல் நோக்கிய மரமும் வடக்கு இலங்கையையும் கிழக்கு இலங்கையையும் வாழவைத்தன. கிணறுகளில்எந்தநேரமும் அடியூற்று நிலைப்பதற்காகத் தமிழன் கண்ட குளங்கள் பல நோக்குகளுக்குப் பயன் தந்தது. அயலில் பரந்துபாயும் மழை வெள்ளம் வடிந்து குளத்தை நிரப்பித் தேங்கி நின்றது. ஊர்கள் தோறும் தோண்டப்பெற்ற குளங்கள்சங்கிலித் தொடர்கள் போல அமைந்திருந்தன. குளத்தங்கரைகளில் ஆல், அரசு, மருது இலுப்பை வேம்பு முதலிய பெருமரங்கள் நிழல் செய்தன. முல்லை, மருதம் என வருணிக்கப் பெற்றமரத்தோப்புகளும் வயல்வரம்புகளும் தமிழர் வாழ்வை மலரச்செய்தன. மரங்களுக்கடியில் ஒரு சிறிய கோயில் வழிபாட்டுக்கமைவாயிருந்தது. காலந்தோறும் கோடை காலத்தில் குளம் வற்றுதல் வழக்கம் வற்றிய குளத்தில் பொருக்கை வயல்களுக்கும் தோட்டங்களுக்கும் இட்டு வளஞ் செய்தனர் அது சிறந்த இயற்கைப்பசளை பொருக்கெடுத்து ஆழமாக்கப் பெற்ற குளத்தில் அதிக நீர் தேங்க வழிபிறந்தது. குளந் தோண்டுதலால் கிடைப்பது இரட்டைப் பரிசு. 'குளம் தோண்டிட வாரீர் ஆயுதங்கள் இரவலாகத் தருவோம்' என்று குரல்கொடுக்கிறார் தொழிலதிபர் க. கனகராசா.

'மில்க்வைற்செய்தி'

**இன்று கொடியேற்றம்**

# மாவையில் அருள்பாலிக்கும் கோயிற்கடவை வெள்ளி வேலவன்



ஒன்பதாவது நூற்றாண்டின் முதற்பகுதியில் வரகுணபாண்டியன் மதுரையிலிருந்து பாண்டி நாட்டை அரசு புரிந்து வந்தான். அக்காலத்தில் அவன் ஒருமுறை இலங்கையைக் கைப்பற்றும் நோக்கமாக இலங்கையின் வடபாகத்தில் வந்திறங்கி, சிங்களத் தலைநகருக்குச் சென்று, கடும்போர் விளைத்து, சிங்கள அரசனைப் போரில் வென்று, அவனிடத்திருந்து திறை பெற்றுக்கொண்டு தென்னாடு திரும்பினான்.

இதற்குமுன் இலங்கையின் வடபாகமாகிய யாழ்ப்பாணம் முதலிய பகுதிகள் சிற்சில காலங்களைத் தவிரச் சிங்கள மன்னரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தன போலும்; ஆனால் வரகுண மன்னன் வடஇலங்கையில் தனது படையோடு இறங்கியதும் அங்கு சிங்களச் சேனையோடு பொருது அதனை வென்றான்.

இந்நிகழ்ச்சி குறித்து அக்காலத்தில் அவனைப் பற்றிப் பாடிய செய்யுள் ஒன்று இறையனார் அகப்பொருளில் மேற்கோளாக எடுத்துக்காட்டப் படுகின்றது. "மணேரழிய மணற்றி வென்றான்" எனக் குறிப்பிடப்பட்டது இந்நிகழ்ச்சியையேயாம். இதனின்று யாழ்ப்பாணத்துக்கு 'மணற்றி' என்ற பெயர் வழக்கிலிருந்து வந்ததெனத் தெரியவருகிறது. அன்றியும் "மணற்றிடர்" என்று ஒரு பெயர் இருந்ததென யாழ்ப்பாண வைபவமாலையிற் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. இதனாலே யாழ்ப்பாணத்து ஒரு பகுதியை "வெலிகம" எனச் சிங்களர் அழைத்தனர் போலும். சிங்களத்தில் வெலி என்பதற்கு மணல் என்பது பொருள். கம என்றால் ஊர். இச்சிங்களச் சொல்லே பிற்காலத்தில் வலிகாமம் என மருவியது.

வரகுணபாண்டியன் காலத்துக்குப் பின் வடஇலங்கைப் பகுதி சிறிதுசிறிதாகச் சிங்களவர் கையினின்றும் அகன்று ஒரு தனி நாடாக விளங்குவதற்கு வேண்டிய நிலையை அடைந்துவந்தது. பத்தாவது நூற்றாண்டின் முற்பகுதியில் முதலாம் பராந்தகசோழன் இலங்கையின் மீது படை எடுத்து வந்து, தனது சேனையோடு ஊர்காவற்றுறையில் இறங்கினான். அப்பொழுது வட இலங்கையிலிருந்த சிங்களச் சேனைக்கும் பராந்தகன் சேனைக்குமிடையில் பெரும் போர் நிகழ்ந்தது. இப்போர் நிகழ்ந்த இடம் மாவிட்டபுரத்திலுள்ள வளவர்கோன் பள்ளம் என்பர் முதலியார் இராசநாயகம் அவர்கள். இப்போரிலே சோழ அரசனின் சேனைத்தலைவனாகிய சிறியவேலன் என்பவன் உயிர்நீத்தான். எனினும் சோழன் மனம் சலிக்கவில்லை. அவன் நேராகச் சிங்களத்தலைநகருக்குச் சென்று சிங்கள அரசனை வென்று திரும்பினான். இந்தக் காலத்தொடக்கத்தில் வடஇலங்கையில் தமிழர்செல்வாக்கு ஒரே பெற்றித்தாய் நிலவியிருந்தது. அதனால் தமிழ்ப்பொதுமக்களன்றி அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் வடஇலங்கைப் பகுதிகளில் மாடிகள் அமைத்துக் குடியேறினர். மாவிட்டபுரப் பகுதியிலுள்ள வளவர்கோன் பகுதியிலும் இவர்கள் குடியேறினர்.

இஃது இவ்வாறிருக்க, சோழநாட்டிலே இருந்த தேசாதிபதி ஒருவனுக்கு மாருதப்பிரவாகவல்லி என்னும் குமாரத்தி ஒருத்தி இருந்தாள். அவளைக் குன்மநோய் என்னும் தீராத நோய் பிடித்திருந்தது. அங்குள்ள வைத்தியர் ஒருவராலும் அந்நோயை மாற்றிக்கொள்ள முடியவில்லை. அதனால் தீர்த்த யாத்திரை செய்து அதனை மாற்றிக் கொள்ள உறுதிகொண்டாள். தன் ஊரினின்றும் புறப்பட்டு அங்கு மிங்கும் சென்று தீர்த்தமாடித் திரிகையில் சாந்தலிங்கம் என்ற சந்நியாசி அவளைக்கண்டனன். அவள் நிலையைக் கண்டதும் இவ்வியாதி பண்டிதர் ஒருவராலும் குணமாக்கத் தக்கதன்று: நீ இப்பொழுதெடுத்த முயற்சியே உனக்குச் சுகந்தரத்தக்கது. இலங்கையின் வடமுனையிலே கீரிமலை என்று ஒரு மலை உண்டு. அங்கே உவர்ச்சலமத்தியில் சுத்ததீர்த்தமும் மலையருவித் தீர்த்தமும் கலந்த உத்தம தீர்த்தமொன்றுண்டு. உலகத்திலுள்ள எல்லாத் தீர்த்தத்திலும் முக்கியமானது; அதிலே போய் நீராடிச் சில காலம் தங்கி இருந்தால் சுகமடைவாய் என்று சொன்னான். அதைக்கேட்டு மாருதப்பிரவாகவல்லி செவிலித்தாய், பணிப்பெண், போர்வீரர் முதலியோர் சூழப் புறப்பட்டுக் கீரிமலையில் வந்திறங்கினாள். அங்கிருந்து வளவர்கோன் பள்ளி இருக்குமிடத்திற்கு அணித்தாய் ஓரிடத்தில் பாளயம் போட்டுக்கொண்டிருந்தாள். அவள் இருந்தஇடத்தைப் பிற்காலத்தவர் குமாரத்தி பள்ளம் என அழைப்பர். நாள்தோறும் அவள் கீரிமலையில் தீர்த்தமாடி, அதன் பயனாகக் குன்மநோய் நீங்கப் பெற்றாள்.

இவ்வாறு தன்னை நெடுங்காலம் வருத்திய நோயினின்றும் நீங்கிய அவள், தான் பாளயம் போட்டிருந்த இடத்தில் சிலகாலம் தங்கிவிட்டாள். அவ்வாறு தங்கியிருக்கும்போது அவள் தனது இருப்பிடத்திற்கு அணித்தாயுள்ள இடங்கள் தோறும் சென்று அங்குள்ள காட்சிகளைப் பார்த்து உலாவி வருதல் வழக்கம். ஒருநாள் வழக்கம்போல் கோவிற்கடவை என்னும் பகுதிக்கு உலாவப் போனாள். இதுவே இப்போது மாவிட்டபுரம் என வழங்கப் பெறும். (மாவிட்டபுரத்திற்கு அருகாமையில் இன்றும் பட்டிக்கடவை என்னும் பெயர் கொண்ட ஊர் உண்டு.) அப்பகுதியில் செழிப்புற்று அடர்ந்து வளர்ந்தோங்கியிருக்கும் மா, பலா, வாழை, கமுகு முதலிய சோலைகளும் வெற்றிலை, வள்ளிக்கொடி முதலிய கொடிகள் வரிசை வரிசையாய் நின்று திகழும் காட்சியும், நெருங்கிக் குளிர்மையாய் வளர்ந்த கதிரின் பாரத்தால் சாய்ந்துநின்று அங்கு வீசும் தென்றலின் அசைவினால் ஒன்றோடொன்று உராய்ந்து கலகலக்கும் தினையும் அவள் கவனத்தை ஈர்த்தன. இவ்வழகிய காட்சியைக் கண்ணுற்றுக்கொண்டு அவள் அடிமேல் அடி வைத்து உலாவி வருகையில் அங்கு ஓர் அரசமரத்தடி நிழலில் குறிஞ்சிக் கிழவோனாகிய முருகப்பெருமானுக்கு பெரியவர் ஒருவர் விளக்குவைத்து வழிபாடாற்றிக் கொண்டிருந்தார். அதனைக்கண்டு அவளும் உடனே மெய்மயிர் சிலிர்ப்ப நாத்தழுதழுப்ப முருகன்மீது உள்ளன்புருகித் தன் இரு மலர்க்கரங்களையும் தலைமேற் குவித்து வணங்கிநின்றாள். சில நேரத்தின் பின் அப்பெரியார், வழிபாட்டை முடித்துக்கொண்டார். உடனே அவள் அப்பெரியாரை அழைத்து "பெரியீர்! தங்கள் பெயர் யாது? இக்கோயில் எழுந்த வரலாறு யாது? அவற்றைச் சிறிது எடுத்து எனக்கு விளம்புமின்" என்று கேட்டனள். அதற்கு அப்பெரியார் அகமகிழ்ந்து புன்னகை பூத்து "அம்மையே! அடியேன் பெயர் சடையன். இங்கு வதியும் வேளாண் குடியிற் பிறந்தேன் முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் இப்பகுதியைக் கோயிற்கடவை என்பர். தொன்றுதொட்டு இவ்விடத்தில் முருகனின் வெள்ளி வேலாயுதத்தை வைத்துப் பரம்பரை பரம்பரையாக வணங்கி வருகின்றோம். எமது தோட்டம் முதலியவற்றுள் நடும் பயிர்கள் செழிப்புற்றோங்கி நற்பயனைக் கொடுப்பதற்காகவும் எம்மைக் காத்து அருள் புரிவதற்காகவும் எமது காவற்கடவுளாகிய முருகனை வழிபட்டு வருகின்றோம்" என மொழிந்தார்.

அவர் சொல்லிமுடித்ததைக் கேட்டதும் மாருதப்பிரவாக வல்லி சிறிதுநேரம் ஏதோ தனக்குள் எண்ணிக்கொண்டு நின்றனள். அதன்பின் அருந்தவப் பெரியீர் அவரை நோக்கி 'அருந்தவப் பெரியீர்! முருகனின் திருவருட் பொலிவோடு தங்கள் முகம் மிளிருவதைக் காண என் மனம் களிப்புறும். முருகன் மேலிருக்கும் அன்போ எனக்குச் சாலப்பெரிது. உமது வழிபாட்டையும் அரசமரத்தின் கீழ் இருக்கும் இவ்வெள்ளி வேலாயுதத்தையும் கண்டதும் முருகப்பெருமானுக்கு இங்கு அழகியதோர் கோயில் கல்லினாற் சமைக்கவேண்டும் என அவாக்கொண்டுள்ளேன். அவ்வாறு யான் செய்வதற்கு உமது திருவுள்ளக் கருத்து யாதோ?" எனக் கேட்டனள்.

அதற்கு அப்பெரியார் இறைவனுக்குத் தாங்கள் ஆற்ற இருக்குப் திருத்தொண்டிற்கு அட்டிசொல்ல அடியேன் யார்? தங்கள் திருவுள்ளக்கருத்து யாதோ, அப்படியே ஆற்றுக; முருகப்பெருமானின் திருவருள் நும்மீது பொழிந்தருளுக" என விடை கூறினர்.

இச்சொற்களைக் கேட்டதும் மாருதப்பிரவாகவல்லி களிப்புடன் தனது இருக்கை சென்றனள். மறுநாள் தனது தந்தையாருக்கு முருகனுக்குக் கோயில்கட்டி எழுப்பத்தான் நினைத்திருப்பதாகவும் அதற்கு வேண்டியன யாவற்றையும் சோழநாட்டிலிருந்து அனுப்பி வைக்குமாறும் ஒரு ஓலை விடுத்தனள். அதற்கு அவள் தந்தையாரும் இசைந்து கோயிற் கட்டட வேலைக்கு வேண்டிய பொருள்களையும், சிற்பிகள் முதலியோரையும், உருவச்சிலையையும், நித்திய நைமித்திய பூசைகளை நடத்துவதற்குப் பார்ப்பனரையும் சோழநாட்டிலிருந்து அனுப்பி வைத்தார். முருகப்பெருமானின் திருவுருவச்சிலை கப்பல் மூலம் கசாத்துறை (இதற்கு வேறொரு பெயர் குரக்கன் துறை. இதனைப்பருத்தித்துறை என்னும் பெயருடன் ஒத்து நோக்குக) என்னுமிடத்தில் வந்திறங்கியது. அதனால் இத்துறை காங்கேயன்துறை என இன்று வழங்குவதாயிற்று. மாருதப்பிரவாகவல்லியும் தானாகவே நின்று தன் கண்காணிப்பில் கோயிலைக்கட்டி, அங்கு வந்தபார்ப்பனத் தலைவனைக் கொண்டு ஆகமமுறைப்படி தேவாரப்பிரதிட்டை செய்து, கும்பாபிடேகம் பண்ணிவைத்தனள். இதுகாறும் திராவிடமுறைப்படி மரத்தின்கீழ் நடைபெற்று வந்த முருகன் வழிபாடு, ஆகம முறைப்படி எழுந்த வழிபாடாக மாறிற்று. அன்றியும் அக்கோயிலுக்கு வேண்டிய பூசைகள் காலந்தவறாது நடந்துவரும் வண்ணம் அதன் செலவிற்காக நன்செய் நிலத்தையும் புன்செய் நிலத்தையும் மானியமாக ஈழநாட்டிலும் சோழநாட்டிலும் வழங்கினள்.

சோழமன்னனின் ஆட்சி இலங்கையில் வலுவுற்றிருந்த காலத்தே சைவக் கோயில்கள் பல இலங்கையில் எழுந்தன என்பது நன்கறிந்ததொன்றாகும். பொலநறுவையில் இப்பொழுது காணப்படும் சிவன் கோயிலும், இன்றும் பழுதான நிலையில் கவனிப்பாரற்று இருக்கும் ஏனைய கோயில்களும், தெருவோரங்களில் கேடுவாரற்று இருக்கும் சிவலிங்கங்களும் இதற்குச் சான்று பகரும். இதுபோலவே அக்காலத்திலே மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலும் எழுந்தது. அன்றியும் அரசகுடும்பத்தைச் சேர்ந்த ஒருத்தி கட்டி எழுப்பினதாகையால் தஞ்சாவூரிலுள்ள இராசராசேசுவரமுடையார் கோயில் போல இதுவும் அரசகுடும்பத்தின் கண்காணிப்பில் இருந்து வந்தது.

பதின்மூன்றும் நூற்றாண்டும் தொடக்கம் சோழரின் ஆட்சிக் காலம் இலங்கையில் ஒருவாறு முடிந்தது. அதன்பின் கர்நாடக தேசத் தொடர்பும் இருந்திருக்கவேண்டும். மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு அணித்தாகக் 'கன்னடிய தெரு' என்னும் ஓர் இடமுண்டு. கர்நாடக தேசத்தவர் வந்து குடியேறியபடியால் எழுந்த பெயரே ஈற்றில் கன்னடியர் தெரு என மருவி வழங்கலாயிற்று. யாழ்ப்பாணத்தில் ஆரியச்சக்கரவர்த்திகள் பிறிதோர் இராச்சியத்தை ஆங்கு நிறுவினர். அவர்கள் காலத்தில் இக்கோயிலும் செவ்விதான நிலையில் இருந்துவந்தது. அதன் பின்னர் பதினாறும் நூற்றாண்டில் பறங்கியர் யாழ்ப்பாணம் அரசினைக் கைப்பற்றினர். கைப்பற்றியதும் தமது சமயத்தையும் பரப்பத்தொடங்கினர். அதற்காக யாழ்ப்பாணத்தில் அக்காலத்திலிருந்த கோயில்கள் யாவற்றையும் இடித்துத் தரைமட்டமாக்கினர். அன்றியும் மக்களுக்குத் தமது மதப் பெயரைக் கொடுத்தனர். அதுமட்டுமன்றிக் கோயிலை அடுத்துள்ள மக்களையும் கத்தோலிக்கராக்கினர். கந்தசாமி கோயிலை அடுத்துள்ள காணிகளின் பெயர் இன்றும் மத்தேகபங்கு இப வாத்தை வளவு என வழங்குவதைக் காண்க.

இக் கோயிலை இடிக்கும்போது அதைக் கண்டு துன்புற்ற ஆதீனப் பார்ப்பனர் ஆதி மூல உருவச் சிலையைக் கயிற்றிற் கட்டி அங்குள்ள கிணற்றில் மெல்லென இறக்கி தண்ணீரினுள் மறைத்து வைத்தனர். இதுவே அழகிய உருவச்சிலை. சோழ நாட்டிலிருந்த கைதேர்ந்த சிற்பிகளால் செதுக்கப்பட்டது. இச்சிலையை இக்காலத்துச் சிலைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இதன் பண்டைப் பெருமை விளங்கும். இதனோடு அங்கிருந்த தங்க உருவச்சிலைகளும் மறைந்தன என்பர். அவை யாங்குச் சென்றதெனத் தெரியவில்லை. இக்கோயில் கட்டி எழுப்பப்பட்டதும் சோழநாட்டுச் சிற்பிகள் செதுக்கிய அழகிய கற்களைக் கொண்டேயாம். அவை யாவும் பறங்கியரால் இடிக்கப்பட்டு அழிந்தொழிந்து போயின. இவை இக்காலத்திருந்தால் சோழநாட்டுச் சிற்பவேலைக்குச் சான்றாக விளங்கும். இக்கோயிலை இடித்து இதன் கற்களைக்கொண்டு கத்தோலிக்கக் கோயிலைக் கட்டி எழுப்பினர் என்பர். போர்த்துக்கேசியர் காலத்துக்குப் பின் ஒல்லாந்தர் காலத்திலும் இக்கோயில் அழிந்திருந்தது. இவ்விரு அரசினரும் சைவமதவழிபாட்டிற்கு முட்டுக்கட்டையாக இருந்தபடியால் அயலிலுள்ள மாந்தர் யாவரும் நள்ளிரவில் இக் கோயில் இருந்த இடத்திற்குச் சென்று மறைமுகமாக முருகனை வணங்கி வந்தனர்.

19-ம் நூற்றாண்டில், ஆங்கிலஅரசினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றவே நிலைமை யாவும் மாறின. போலிக் கிறிஸ்தவராக இருந்தவர் யாவரும் வெளிவெளியாகத் தமது மூதாதையரின் சமயமாகிய சைவத்தைத் தழுவினர். அதனோடு சைவக் கோயில்களையும் புதுப்பித்தனர். அதனால் மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலும் அதனுடைய பழைய நிலைக்குக் கொண்டு வரப்பட்டது. விளாங்குளப் பகுதியிலிருந்து கருங்கல் எடுத்துப் புதியதோர் கோயிலைக் கட்டினர். சோழர் காலத்து நாற்புறமும் கோபுரம் இருந்ததென்பர். ஆனால் இக் காலத்தில் அவ்வாறில்லை, மேற்கு வாசற் புறத்தில் இறங்கூன் பண்டாரம் என்னும் சைவப் பெரியார் கட்டி எழுப்பிய கோபுரம் இருக்கின்றது. சோழர் காலத்துச் செப்புப் பட்டயம் பல இக் கோயிலில் இருந்தன என்றும், இக் கோயில் மூலமூர்த்தியின் பீடத்தில் வைக்கப்பட்ட அரிய பெரிய இயந்திரம் ஒன்று உண்டென்பதும் கேள்வி. அவை யாவும் எங்குற்றனவோ தெரியாது. சோழ அரசகுடும்பத்தாருக்குப் பதிலாக அவர் கொண்டு வந்த பார்ப்பனக் குடும்பங்களின் வழித்தோன்றல்கள் இக் கோயில்களைத் தமக்கு உரிமையாக்கிக் கொண்டனர்.

(இக்கட்டுரை திருவாவடுதுறைஆதீன வெளியீடான 'முருகன்' என்னும் நூலிலிருந்து பெறப்பட்டது.)

---

## இவ்வாரம் உங்கள் பலன்

வாரபலன்: மாதம்- ஆனி திகதி- 9-(1985-06-23)
ஞாயிறு-திதி- பஞ்சமி பிற்பகல் வரை
நக்ஷத்திரம் -மகம் பின்இரவு வரை

**மேடம்**

உங்கள் நடவடிக்கைகளில் தனிச்சிறப்புதென்படும். பெரியவர் ஒருவர் கைகொடுத்து உதவுவார். மகிழ்ச்சிகரமான செய்திக்கும் இடமுண்டு. நீண்டநாள் மனக்குறைநிவர்த்தியாகும்.

**இடபம்**

தொழில் மாற்றம் அல்லது இருப்பிடமாற்றம் ஏற்பட இடமுண்டு. இதன் மூலம் பதவி உயர்வும் கிடைக்கலாம். பிரயாண சுகமும் உண்டு. வெற்றிப்பாதையில் வீறுநடை போடுவீர்கள். தொழில்துறையிலும் புதிய உற்சாகம் பிறக்கும்.

(9-ம் பக்கம் பார்க்க)

வெலிங்டன்
10-30 — 2-15 — 4-15
THE HANDS OF THE NIGHT''
(Adults only)
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

லிடோ சினிமா
10-30 — 2-30
பாண்டியன் — ரேவதி நடித்த
'புதுமைப் பெண்'
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர்
தினசரி 10-30, 2-00, 4-15
Flying Killers
நீரின் மேல் ஆபத்து! மாமிசம் உண்ண விரும்பும் பிராணிகளை யாரால் தடுக்க முடியும் விந்தை, விறுவிறுப்பு. திகில் நிறைந்த சித்திரம்.
(Adults only)

பவித்ரா மினி
கஸ்தூரியார் வீதி
(யாழ் இந்துக் கல்லூரியடி)
4' திரைவானில்
''SUMMER IN HEAT''
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

மொடேர்ண் மினி சினிமா
(ஸ்ரீலங்காஅச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமை)
Calicula Erotica
ஹாஸ்யத்துடன் கூடிய பொழுதுபோக்கு சித்திரம்
கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்.

ஸ்ரான்லி மினி 'A'
10-30, 12-30, 2-15, 4-45
Linda

ஸ்ரான்லி மினி 'B'
10-30, 12-30, 2-15, 4-45
GEST APO'S LAST ORGY
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

நியூசாந்தி (மினி)
(சாந்தி சினிமா)
10-30, 2-30
எம். ஜி. ஆர். மாதுரிதேவி நம்பியார், லலிதா. பத்மினி
கலைஞர் கருணாநிதியின்
மந்திரிகுமாரி
(புதிய பிரதி)
வாள் சண்டைகளும் குதிரை ஓட்டங்களும் நிறைந்த படம்.

S. T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
காலை: 9-00 10-30, 12-30 2-30. 4-30.
LINDA
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.
18 வயதுக்குட்பட்டவர் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

# இன்றைய பலன்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

**மிதுனம்**

பொருளாதார நிலை சீரடையும். சிலருக்கு எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு வெளியூரிலிருந்து செய்தியும் கிடைக்கும் பணம் தேடும் படலத்தில் வெற்றிக்கு இடமுண்டு.

**கடகம்**

வாழ்க்கை ஒரு புதிராகத் தோன்றும். செலவினங்கள் உச்சக் கட்டத்தை அடையும் புதிதாக எதையும் ஆரம்பியாதிருப்பது நன்று. தனிவழிப் பயணத்தைத் தவிர்க்கவும். ஏமாறுதீர.

**சிங்கம்**

அவசர புத்தியையும்கோபத்தையும் அடக்கவும் நிலைமை சீரடையும் ஆணவப் போக்கினால் பிறரை பகைத்துக் கொள்ள நேரிடும்.

**கன்னி**

பெரிய இடத்துச் சிநேகம் ஏற்படும் புதுவழி மூலம் பணம் கிடைக்கும் மாணவர்களுக்குப் பொன்னான வாரம். சொகுசான வாழ்க்கை கிடைக்கும்.

**துலாம்**

மறைமுக எதிர்ப்புகள் உருவாகும். முன்னெச்சரிக்கை நன்று. தூக்கம் விழிகளைத் தழுவமறுக்கும். சகோதர வழியாலும் சஞ்சலப்பட நேரும்.

**விருச்சிகம்**

விளைபொருள் விருத்தியுண்டு. வாகனச்சொந்தக்காரர்களுக்குச் சிறப்பான வாரம். தாய்வழி மூலம் சிலருக்கு தனலாபம் கிடைக்கும்.

**தனுசு**

காரியம் யாவிலும் கை கொடுத்து உதவுவதற்கு ஒருவர் முன்வருவார். உங்கள்சீரிய நோக்கம் எங்குப் சிறப்பைத் தேடித்தரும். செய்தொழிலாலும்சிறப்பு புத்திரர்களாலும் புகழும் பெருமை.

**மகரம்**

தூரதேசவாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும் விபத்துக்கும்இடமுண்டு முன்னேற்றத்தைத்தடுப்பதற்குஎதிரிகள் முனைவர். அமைதி நன்று

**கும்பம்**

காதலர்களுக்கு கனிவான வாரம் குடும்பத்திலும் குதூகலம் தென்படும் உறவினர் ஆதரவும் பெற்றோர் ஆசியும் கிட்டும். சாஸ்திரவழியாலும் சுகமுண்டு.

**மீனம்**

எண்ணியதில் ஏமாற்றம் ஏற்படலாம். நண்பர்களும் காலைவாரிவிடக்கூடும் நிதான புத்தியுடன் நடந்து கொள்ளவும். விபத்துக்கும் இடமேற்படலாம்.

திருமலை
**க.வே.ரவீந்திரன்**

குமரன் மினி சினிமா
(67, ஸ்ரான்லி வீதி)
10-30, 2-30, 4-30.
Guest Apo's Last Lady
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்
AM. 9-00, 12-30.
LINDA
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

புத்தம் புதிய வெளியீடு
22-6-85 தொடக்கம்
தேவிமினி சினிமா
(வின்ஸர் அருகாமை)
பிரபு, பூர்ணிமா ஜெயராம் நடித்த
உங்க வீட்டுப்பிள்ளை
கலர்

லதா மினி
(கோண்டாவில்)
மோகன், லக்ஷ்மி, ரேவதி
உதய கீதம்

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30 2 30
கமலஹாசன்-ஜெயப்பிரதா
சலங்கை ஒலி
கடைசிவாரம்

# ஊமைக்குயில்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பவில்லை. டேவிட்டின் தங்கை ஒரு பைத்தியம் என்று யாரும் சொல்வதை அவன் விரும்பவில்லை. இன்னும் சில நாட்களில் மேரியை வீட்டிற்கு அழைத்துச் செல்வதாய் வாக்களித்தான் டேவிட்.

நாட்கள் நகர்ந்தன. ஒரு நாள் திங்கட்கிழமை. காரியாலயம் போகத் தயாராகிக் கொண்டிருந்தான் டேவிட். டெலிபோன் மணி தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது ஓடிச் சென்று டெலிபோனை எடுத்தான் டேவிட். போனில் வந்த செய்தியைக் கேட்டதும் டேவிட்டின் கையில் இருந்த டெலிபோன் நழுவிக் கீழே விழுந்தது.

அவனால் அச்செய்தியை நம்ப முடியவில்லை நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் நெஞ்சைப் பற்றிக் கொண்டு கதிரையில் சாய்ந்தான் டேவிட்.

''மேரி இறந்து விட்டாளா? மாடியில் இருந்து குதித்துத் தற்கொலை பண்ணி விட்டாளா? இல்லை, அவள் இறக்கவில்லை என் தங்கை மேரி இறக்கவில்லை அவள் என்னைப் பார்த்துச் சிரிக்கிறாள். முத்துப் பற்கள் பளிச்சிடக் கலகல வென்று சிரிக்கிறாள். மேரி... மேரி...'' என்று பித்துப்பிடித்தவன் போல் கத்தினான் டேவிட்.

ராஜி அந்த அம்மாப் பொம்மைக்கு அலங்காரம் செய்து கொண்டிருந்தாள் 'ராஜியிடம் இச்செய்தியைச் சொல்வதா? இனியும் இச் செய்தியை மறைப்பதா? இன்னும் சில மணி நேரத்தில் இந்த வீட்டிற்கு மேரியின் உடலைக் கொண்டு வரப்போகிறார்கள். இதனை ராஜியால் தாங்க முடியுமா? இப்பொழுது சொல்லா விட்டாலும் இன்னும் சில நேரத்தில் இச் செய்தியை ராஜி தானாகவே அறிந்துகொள்வாள் குழந்தையின் முன் குற்றவாளியாக நிற்பதைவிட அதைச் சொல்வதே மேல் என்ற எண்ணம் டேவிட்டிற்கு ஏற்படுகிறது.

''ராஜி ராஜி ராஜி...'' என்று ஈனஸ்வரத்தில் அழைத்தான் டேவிட். ''அங்கிள் என்னைக் கூப்பிட்டீங்களா?'' என்று கேட்டபடி டேவிட்டின் அருகில் வந்தாள் ராஜி

ராஜியின் களங்கமில்லா விழியைப்பார்த்து ஒரு கணம் மெய்சிலிர்த்துப் போய்விடுகிறான் டேவிட்.

''ராஜி உங்கம்மா மேரி கடவுளிடம் போயிட்டாம்மா...'' என்று மெதுவாக முனகினான் டேவிட்.

''ஏன் அங்கிள் நான் மம்மி விட்டப் போகாம இருக்கத் தானே எனக்கு அம்மாப் பொம்மை வாங்கித்தந்தீங்க. மம்மி கடவுளிட்டப் போகாம இருக்க நாம மம்மிக்கு கடவுள் பொம்மை வாங்கிக் கொடுப்பமா?'' என்று மிகவும் சாதாரணமாகக் கேட்டாள் ராஜி.

அவள் வார்த்தையைக் கேட்டுச்சிலையானான் டேவிட். ஒரு அம்மாப்பொம்மை குழந்தை மனத்தில் எவ்வளவு தாக்கத்தை உண்டுபண்ணி விட்டது. அவள் உள்ளம் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டு விட்டது என்றுதன்னையே நொந்து கொண்டு,

''ராஜி உங்கம்மா இறந்து விட்டா நம்மையெல்லாம் விட்டுட்டுப் போயிட்டாம்மா உங்கமம்மி மேரி இனித்திரும்பி வரமாட்டாம்மா'' என்று கூறியபடி ஓ என்று கதறினான் டேவிட்

ராஜியின் விழிகள் அசையவில்லை. அந்த அம்மாப் பொம்மை ராஜியின் கையிலிருந்து நழுவிக் கீழே விழுந்தது.

ராஜிவாய் திறக்கவில்லை. எதிர்பாராத இந்த அதிர்ச்சி ராஜியை ஊமையாக்கிவிட்டது ஆமாம். அவள் ஊமையாகிவிட்டாள் டேவிட்டின் வாழ்வின் ஒரே ஆதாரமான சோலைக்குயினென்று ஊமைக் குயிலாகிவிட்டது.

[யாவும் கற்பனை]

COLOMBO - BERLIN
உடனடியான
பயண ஒழுங்குகள்
● குறைவான கட்டணங்கள்
● நம்பிக்கையைத் தரும் சேவை
மாற்றமில்லாத திகதி

★ யாழ்ப்பாணத்தில் இருந்தபடியே பயணத்துக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்யலாம். பணத்தைக் கொழும்புக்கு எடுத்துச் செல்லத் தேவையில்லை.
★ கட்டுநாயக்காவரை எமது பிரதிநிதி உங்களுடன் வந்து எல்லா உதவியும் செய்வார்.
★ கொழும்பில் நல்ல (Five Star Hotel) தங்குமிட வசதி, உணவு வசதி, கட்டுநாயக்கா செல்லப் பிரயாண ஒழுங்கு ஆகியவற்றை நாம் இலவசமாகசெய்து தருவோம்
★ June 24, 27 July 1, 4, 8, 15 திகதிகளில் பிரயாணம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பிரயாணம் செய்யவிரும்புவோர் உடனடியாக தொடர்பு கொள்ளவும்
★ பயணக் காசோலைகளை எடுப்பதற்கு சகல ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

சிங்கப்பூர் ஊடாகப் பேர்லின் செல்லும் வசதியை ஒவ்வொரு வியாழக்கிழமையும் 20 பயணிகளுக்கு மட்டும் ஏற்படுத்தித் தருவோம். இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புவோர் நேரத்துடன் தமது ஆசனங்களைப் பதிவுசெய்துகொள்ளவும். Dyn. Ads

Confirmation, Re-confirmation, Cancellation ஆகிய பணிகளையும் நாம் கவனிப்போம்.

இந்தியப் பிரயாணம்: இந்தியாவுக்கு விஸா, கடவுச் சீட்டு, கடவுச்சீட்டுப் புதுப்பித்தல், பொண்ட் ஆகியவறறுக்கான சகல ஒழுங்குகளையும் செய்து தருவோம்.

உலகின் எப்பகுதிக்கும் எம்மிடம் விமானச் சீட்டுக்கள் பெறலாம்.

மேலதிக விபரங்களுக்கு எமது அலுவலகத்தில் திருமதி சாவித்திரிதேவி பாலசிங்கம் அவர்களுடன் தொடர்புகொள்க.

MACK TRAVELS LTD.
இல. 8, முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 24791

கிளைகள்: QUICKS ENTERPRISES — TRAVELS AND TOURS
533, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
QUICKS TRAVELS AND TOURS
சரஸ்வதி தோட்டம், Church Road, சாவகச்சேரி.
Tel. 273

## கோட்டைக்குள் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கோட்டைக்குள் நேற்றிரவு இடம் பெற்ற திடீர்ச் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து யாழ் ஆஸ்பத்திரி விசேஷ வைத்திய நிபுணர் ஒருவரின் தேவை பெறப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (மா)

## சிறிமா அரசுக்கு

(7ம் பக்கத் தொடர்ச்சி)

1970 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் சிறிமா தலைமையில் ஐக்கிய முன்னணி அமோக வெற்றியீட்டியது. தேர்தலில் வாக்களித்ததுபோல் பாராளுமன்ற உறுப்பினர்களே அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்களாகக் கொண்டு அரசியல் நிர்ணய சபை கூட்டப்பட்டது.

தந்தை செல்வாவும் தமிழரசாரும் நீண்ட ஆலோசனையின் பின் அரசியல் நிர்ணயசபைக் கூட்டங்களில் கலந்துகொண்டு தங்கள் அடிப்படைப் பிரேரணைகளைச் சமர்ப்பித்தனர். இவை யாவும் நிராகரிக்கப்பட்டன.

1971ஆம் ஆண்டு ஜூன் 28ஆம் நாள் அரசியல் நிர்ணய சபையின் கூட்டத்தில் கடைசியாகக் கலந்துகொண்ட பின் திரு. செல்வநாயகம் தொடர்ந்தும் இக் கூட்டத்தில் கலந்து கொள்வதில் அர்த்தமில்லை என்று கூறி அறிக்கை விடுத்து விட்டு அன்றைய அமர்வு முடிந்ததும் தமது சக உறுப்பினர்களுடன் வெளிவந்தார்.

புதிய அரசியலமைப்பு 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் தேதி அமுலுக்குவந்தது. முதலாவது குடியரசுத்தலைவராக திரு வில்லியம் கோபல்லவா பதவியேற்றார்.

இப்புதிய அரசியலமைப்பை எதிர்த்து தமிழ்க் கட்சிகளுகிடையே ஒற்றுமை ஏற்படுத்தப்பட்டது. தமிழ் அரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், இ. தொ. கா ஆகியவை இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி உருவானது.

புதிய அரசியல் அமைப்பைத் தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்பதை எடுத்துக் காட்டுவதற்காக தந்தை செல்வா தமது காங்கேசன்துறைத் தொகுதி உறுப்பினர் பதவியை 1972-ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மூன்றாம் தேதி துறந்தார்.

இச் சபையில் எனது ஸ்தானத்தை நான் துறந்து, எனது கொள்கையை முன் வைத்து நான் மீண்டும் போட்டியிடும்போது அரசாங்கம் தனது கொள்கையை முன் வைத்து என்னோடு போட்டியிட வேண்டுமென்று கேட்கிறேன். அத் தேர்தல் முடிவு தமிழ் மக்களது தீர்ப்பாகவே இருக்கும்'' என்று தந்தை செல்வா பாராளுமன்றத்தில் அன்று விடுத்த அறிக்கையில் கூறியிருந்தார்.

இரண்டு வருடங்கள் கழிந்த பின்னர் நடந்த உப தேர்தலில் தந்தை செல்வா பெரு வெற்றி பெற்றார்.

தமிழ் ஈழம் அமைக்கக் கோரும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைத் தூண்டுப் பிரசுரமாக விநியோகித்த திருவாளர்கள் அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், க. துரைரத்தினம், கா பொ. இரத்தினம ஆகியோர் மீது இராஜத்துரோகக் குற்றம் சாட்டி ட்ரயல் அற்பார் நீதிமன்றத்தில் அரசு வழக்குத் தொடர்ந்தபோது அரசியலில் ஒன்றுயிருந்து பின் விரோதிகளாகி மீண்டும் ஒன்று சேர்ந்த தந்தை செல்வாவும் தலைவர் ஜி ஜி யும் அந்த வழக்கில் ஒன்றாக நின்று வாதாடுவதற்கு முன்வந்தனர்.

திருஷ்டி பட்டது போல் அவ் வழக்கில் வெற்றிக்கு உழைத்த திரு எம். திருச்செல்வம் முதலில் திடீரென மறைந்தார் தொடர்ந்து தலைவர் ஜி. ஜி யும் இறுதியாக தந்தை செல்வாவும் தமிழ் மக்களைத் தவிக்கவிட்டுச் சென்றனர்.

தந்தை செல்வாவின் இக் கட்டுரைத்தொடரை இன்னும் விரிவாகவே எழுத விரும்பினேன். ஆசிரியர் என்ன நெருக்குதலாலோ என்னைக் கட்டுரையை முடிக்கும்படி நெருக்குகிறார்.

தந்தை செல்வா இல்லாமல் தமிழரசுக் கட்சியும் பின்னர் கூட்டணியும் இல்லை; தமிழரசுக் கட்சியில்லாமல் தமிழர் போராட்டமும் இல்லையே!

## கோப்பாய் தெ. ப. பொ. கூ. ச. கொள்ளை

# பொறுப்புள்ள எவரும் இதைச் செய்திருக்கமாட்டார்'

## தொழிலாளர்கள் ஊழியர்கள் கண்டனம்

(கொழும்புத்துறை)

''பொறுப்புள்ள எவரும் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களில் கொள்ளையடிக்கும் கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடமாட்டார்கள். ஏழைச் சீவற் தொழிலாளர்களின் உழைப்பினால் உருவான பலஆயிரம் ரூபாவையும், பெறுமதி வாய்ந்த தட்டச்சு இயந்திரத்தையும் கொள்ளையடித்துச் சென்றதுடன் காரியாலயத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த பணியாளர்களையும் மிருகத்தனமாகத் தாக்கியும் சென்றுள்ளது அநாகரீகமான செயல் மட்டுமல்லாது சீவற்தொழிலாளர்களின் எதிர்காலம் எமது மண்ணில் எவ்வாறு அமையப்போகின்றதோ என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.''

இவ்வாறும் கூறும் அறிக்கையொன்றை கோப்பாய் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர்களும், ஊழியர்களும் விடுத்துள்ளனர். அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

''இது போன்ற கொள்ளைகளினால் எமது தொழிலாளர்களிடையே ஏற்படும் ஐயப்பாடான எண்ணத்தால் உருவாகின்ற விளைவுகள் முழு இனத்துக்குமே பாதகமான நிலையை ஏற்படுத்தக் கூடியது. அதன் விளைவுகளையும் சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பேற்க வேண்டும். இத்துர்ப்பாக்கிய நிலையைத் தவிர்க்கும் முகமாக அனைத்து அமைப்புக்களும், விடுதலை விரும்பிகளும் இக் கொள்ளையிலும், மிருகத்தனமான தாக்குதலிலும் ஈடுபட்டவர்களைக் கண்டித்தும், கண்டுபிடித்தும் எம்மிடமிருந்து அபகரித்துச் சென்ற பணத்தையும், தட்டச்சு இயந்திரத்தையும் திருப்பி ஒப்படைக்க வற்புறுத்துமாறு உருக்கமான வேண்டுகோள் விடுக்கின்றோம்.''

## இலங்கை அகதிகளுக்கு தொழில் வாய்ப்பு

(சென்னை)

ஜப்பானிய நிறுவனம் ஒன்றினால் கூட்டுறவு நெசவு ஆலை ஒன்று சென்னையில் அமைக்கப் படவுள்ளது.

இலங்கையிலிருந்து தமிழ் நாடு வந்துள்ள தமிழ் அகதிகளுக்கு இவ்வாலையில் தொழில் வாய்ப்பு அளிக்கப்படும். (ரா)

## "அமைதி பேணப்பட்டால் அபிவிருத்தி''

(கொழும்பு)

''வடக்கு கிழக்குப் பகுதியில் எவ்வித தீவிரவாத செயல்களும் இடம்பெறவில்லை'' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

இந்த வித சமாதானம் தொடர்ந்தும் பேணப்பட்டால் வடபகுதிகளில் பல அபிவிருத்தித் நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றும் அமைச்சர் கூறினார். (மா)

# "களவாகக் கள்ளை விற்காதீர்''

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச்சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட மரங்களிலிருந்து உற்பத்திசெய்யப்படும் கள்ளைக் களவாக விற்பனவு செய்யவேண்டாம் என்று மேற்படி சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுசம்பந்தமாக யாழ். மாநகர தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச்சங்கம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த காலங்களில் இக்கூட்டுறவுச்சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுச் சீவல்தொழில்செய்து வந்தவர்கள் இன்று தன்னிச்சையாக மரங்களைக் கொள்வனவு செய்து சங்க விதிமுறைகளுக்கு அமையாமல் இயங்க எத்தனிப்பதாகத் தெரியவருகின்றது. தனிப்பட்டவர்களுக்கு மரங்களை வழங்கும் மரச் சொந்தக்காரர்களின் மீதும் தொழில் புரிபவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும். முறைப்படி சங்கத்தின் அனுமதிபெற்று மரத்திற்கு இலக்கமிடப்பட்ட பின்னரே தொழில் செய்ய அனுமதிக்க வேண்டும்.

## கோட்டைக்குள் நடந்த கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள ஆயுதப்படையினருக்கும் பொது மக்களுக்குமிடையே நேற்றுக் கிரிக்கெட் போட்டியொன்று நடைபெற்றது. பொதுமக்கள் சார்பில் வங்கிக் கோஷ்டியினர் கலந்து கொண்டனர். யாழ். கோட்டைக்குள் இடம் பெற்ற இப்போட்டி படையினருக்கும் மக்களுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் இடம்பெற்றதாக ஆயுதப் படை அதிகாரியான திரு ஆரிய திலகா தெரிவித்தார்.

## எந்த இனத்தின்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிரண்டும் வடக்கு கிழக்கில் கைவிடப்பட்டால் மாத்திரமே தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் தனது ஆதரவை வழங்கும் என்றும் இப் பிரச்சினைக்குத்தீர்வு காண்பது தொடர்பாக இந்தியாவுடனும் தீவிரவாதக் குழுக்களுடனும் ஏனைய சமயக் குழுக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

''இந்தப் பேச்சு வார்த்தையில் ஒரு உடன்பாடு ஏற்பட்டால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தில் அதற்கான சட்டம் ஒன்று தயார் செய்யப்பட்டு அதுபற்றித் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு பாராளுமன்றத்திடமே விடப்படும்.

''என்னவானாலும் கூட யார் ஆதரித்தாலும், எதிர்த்தாலும் இவ்வாண்டு முடிவடைவதற்குள் பல்லாண்டு காலமாக நாட்டையும் நாட்டு மக்களையும் பீடித்துள்ள இந்தக்கொடிய நோயைத் தீர்த்து வைப்பதற்குத் திடசங்கற்பம் பூண்டுள்ளேன்'' என்றார். (ரா)

## குச்சவெளி பொலிஸில்

# தீவிரவாதிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

(கொழும்பு)

அண்மையில் குச்சவெளிப் பொலிஸ்நிலையம் தாக்கப்பட்டபோது அங்கிருந்து தமிழ்த் தீவிரவாதிகளினால் எடுத்துச் செல்லப்பட்ட ஆயுதங்கள் பற்றி நேற்றுப் பாராளுமன்றத்தில் அரச தரப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

பிரதமர் ஆர் பிரேமதாசாவின் சார்பில் இது குறித்துப் பேசிய பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் திரு வின்சன்ட் பெரேரா எடுத்துச் செல்லப்பட்ட ஆயுதங்களின் விபரங்களை வெளியிட்டார்.

37 ரிப்பிட்டர் சொட்கன், 4 எஸ். எம் ஜி, 10 தானாகவே குண்டுகளை நிரப்பும் ரைபிள், 10 சொட்கன், 1 சேர்விஸ் றிவோல்வர், 23 ரைபிள்கள், 8 கைக்குண்டுகள், 300 சுற்று வெடிமருந்துகள், 200 எஸ் ஜி. றைபிள், 1000 ரவுண்ட் வெடிமருந்து மற்றும் சீருடைகளும் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன என்று அமைச்சர் தெரிவித்தார்.

## தேர்த் திருவிழா

(யாழ்ப்பாண)

சொக்குவில் மாத்தனைக் கந்தன் ஆலய தேர்த்திருவிழா நாளை திங்கள்கிழமை நடைபெறும்.

## ஹொறணையில் வெள்ளம்

(கொழும்பு)

ஹொரண பிரதேசத்தில் தொடர்ச்சியாகப்பெய்துவரும் பெரும் மழையினால் 25 கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

## சடலம் யாழ் வந்தது!

(கொழும்பு)

திஸ்ஸ மஹாரகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தரின் சடலம் நேற்று அவரது சொந்த ஊரான அரியாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இவரது சடலத்தில் வெட்டுக்காயங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தரான ஐ. திருநாவுக்கரசு (41 வயது) என்பவரின் சடலமே இங்கு கொண்டுவரப்பட்டதாகும்.

விஷேச பிரேத வண்டியில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் பாதுகாப்புடன் இச்சடலம் கொண்டுவரப்பட்டுள்ளது. (மா)

## ஈழம் புலிகளை ...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

போர் நிறுத்தத்தால் இலங்கை அரசுக்கு உண்மையிலேயே அக்கறை இருக்கிறதா? அல்லது போர்நிறுத்தத்தத்தின் பின்னணியில் தந்திரம் செய்கிறதா? என்பதையும் கவனிக்க வேண்டியிருக்கிறது என்று அவர் கூறினார்.

## ஆயுத --

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை மக்களுக்குச் சொந்தமான உரிமைகளைகையெழுத்து இட்டுக்கொடுக்க ஒரு குழு தற்போது இந்தியா சென்றுள்ளது என்றும், அரசாங்கமே தற்போது முதலில் ஆயுதங்களைக் கீழே போட்டுள்ளது என்றும், தமிழ்த் தீவிரவாதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்குவதாகக் கூறும் அரசு ஜே வி. பி மீதான தடையை இன்னமும் நீக்கவில்லை என்றும், அவர் குறிப்பிட்டார்,

## சிறுபான்மை ,.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமைகள் பேணப்படுவதற்கு அமைப்பு ஒன்றை நிறுவுவதை விட தமிழ் மக்களின் அபிலாஷைகளை உணர்ந்து அரசு செயலாற்ற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இன்றைய நிலையில் தமிழ்ப் பிரதேசங்களுக்குச் சுயாட்சி வழங்குவதன் மூலமே அபிலாசைகளைத் திருப்திப் படுத்த முடியும் என்றும் அவர் சொன்னார். [மா]

## உண்ணாவிரதம் --

சங்கம் மூடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

''நியாயமான தீர்வை ஏற்படுத்த விரும்புபவர்களே 200 ஏழை ஊழியர்களுக்கு வழி செய்யுங்கள்'' என்று கூறும் சுவரொட்டிகள் யாழ்நகரில் நேற்றுக் காணப்பட்டன. (மா)


# சேப்ரி ரவல்ஸ் பஸ் சேவை

## ஸ்தாபனத்தாரின் முக்கிய அறிவித்தல்

24-6-85 திங்கள் முதல் பஸ் கட்டணம் 100/- ரூபாவாக மாற்றப்பட்டுள்ளது.

3985


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu P. Box 49. Telegram Eelanadu. Telephone: 22389-24126.